# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு
2024 - 2025

மானியக் கோரிக்கை எண். 24

## சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

**எஸ். ரகுபதி**
சட்டத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கங்கள் |
|---|---|---|
| I. | முன்னுரை | 1–2 |
| II. | துறையின் பணிநிலை அடுக்கமைவு | 2–4 |
| III. | சிறைகளின் வகைப்பாடு | 4–10 |
| IV. | சிறை நிருவாகப் பிரிவுகள் | 10–14 |
| V. | மனிதவள மேம்பாடு | 14–20 |
| VI. | சிறை பாதுகாப்பு | 20–26 |
| VII. | சிறைகளை நவீனமயமாக்கல் | 27–30 |
| VIII. | சிறைவாசிகளின் நலன் | 30–47 |
| IX. | சிறைவாசிகளின் சீர்திருத்தம் | 47–65 |
| X. | மனமகிழ் நிகழ்வுகள் | 65–68 |
| XI. | பணியாளர் நலன் | 68–77 |
| XII. | புதிய செயல்பாடுகள் | 78–79 |
| XIII. | முடிவுரை | 79–80 |
| | பிற்சேர்க்கை I – II | 81–93 |

## உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண். 24

## சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு – 2024–2025

### I. முன்னுரை

**தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்**
**ஒத்தாங் கொறுப்பது வேந்து**

**-- (திருக்குறள்–561)**

**நடைபெற்ற குற்றங்களை நடுநிலை தவறாமல் ஆராய்ந்தறிந்து, மீண்டும் அவை நிகழா வண்ணம் அக்குற்றங்களுக்கேற்பத் தண்டனை கிடைக்கச் செய்வதே அரசின் கடமையாகும்.**

குற்றங்களை நடுநிலை தவறாமல் ஆராய்ந்தறிந்து, மீண்டும் அவை நிகழா வண்ணம் அக்குற்றங்களுக்கேற்ப குற்றவாளிகள் மற்றும் சட்டத்தை மீறுபவர்களுக்கு தண்டனை வழங்கி அவர்களை சீர்திருத்தி குற்ற நிகழ்வுகளை குறைக்கும் குற்றவியல் நீதி முறை அமைப்பில் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை

முக்கியப் பங்கு வகிக்கிறது. நீதிமன்றங்கள் குற்றவாளிகளுக்கு வழங்கும் தண்டனைகளை நிறைவேற்றுவது மட்டுமின்றி, அவர்களை நல்வழிப்படுத்தி அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான கல்வி மற்றும் தொழில் திறன்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் இத்துறை வழங்குகிறது. சிறைகள் மற்றும் சிறைவாசிகளின் பாதுகாப்பினை மேம்படுத்துதல், சிறைவாசிகளின் நலன் மற்றும் சிறைவாசிகளை பொறுப்புள்ள நபர்களாக மாற்றி சமுதாயத்தில் மீண்டும் இணைத்தல் ஆகிய மூன்றும் இத்துறையின் முக்கிய நோக்கங்களாகும். சிறைப் பணியாளர்கள் மற்றும் சிறைவாசிகளுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதற்காக உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கும் நவீனமயமாக்குவதற்கும் இத்துறை பல முயற்சிகளை எடுத்து வருகிறது.

## II. துறையின் பணிநிலை அடுக்கமைவு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, அரசின் உள் துறை நிருவாகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. இத்துறைக்கு கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர் பதவி நிலையில் உள்ள முதுநிலை இந்திய காவல்பணி அதிகாரியை தலைமை இயக்குநராகவும், அவருக்கு உதவியாக

தலைமையிடத்தில் ஒரு சிறைத்துறைத் தலைவரும், சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஐந்து சரக சிறைத்துறை துணைத்தலைவர்களும் உள்ளனர். சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் நிருவாக கட்டமைப்பு பிற்சேர்க்கை–I–ல் வழங்கப்பட்டுள்ளது .

மத்திய சிறைகளின் பொறுப்பு அலுவலர் சிறைக் கண்காணிப்பாளர் ஆவார். மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச்சிறைகள், கிளைச்சிறைகள், திறந்த வெளிச்சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளிகள் (வளரிளம் குற்றவாளிகளின் சீர்திருத்தப் பள்ளிகள்) அந்தந்த மத்திய சிறை கண்காணிப்பாளரின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதாகும். புழல், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள பெண்களுக்கான தனிச்சிறைகள் பெண் சிறைக் கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன. கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் உள்ள பெண்களுக்கான தனிச் சிறைகள் பெண் கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர்களின் தலைமையின் கீழ் இயங்கி வருகின்றன. மாவட்ட சிறைகளில் கண்காணிப்பாளராக பணிபுரியும் கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர்கள், அந்தந்த மாவட்டங்களில் உள்ள தனிக் கிளைச் சிறைகள்,

திறந்த வெளிச் சிறைகள், கிளைச்சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளிகள் ஆகியவற்றை மத்திய சிறைக் கண்காணிப்பாளர்கள் மேற்பார்வையிட உதவி புரிகின்றனர்.

மேலும், இத்துறை சிறை அலுவலர்/துணை சிறை அலுவலர்/உதவி சிறை அலுவலர்/முதல் தலைமை சிறைக் காவலர்/முதல் நிலை சிறைக் காவலர்/இரண்டாம் நிலை சிறைக் காவலர் ஆகிய களப்பணியாளர்களையும் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்/சீர்திருத்தப் பணியாளர்/மருத்துவப் பணியாளர் / அமைச்சுப் பணியாளர் மற்றும் அடிப்படை பணியாளர்களையும் உள்ளடக்கியதாகும்.

01.04.2024– அன்றைய நிலவரப்படி இத்துறை பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 5489 ஆகும்.

## III. சிறைகளின் வகைப்பாடு

இம்மாநிலத்தில் உள்ள சிறைகள், மத்திய சிறைகள், தனிச்சிறைகள், மாவட்ட சிறைகள், தனிக் கிளைச்சிறைகள் மற்றும் கிளைச்சிறைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் கீழ் 9 மத்தியசிறைகள், 5

பெண்கள் தனிச்சிறைகள், 14 மாவட்டச்சிறைகள், 96 ஆண்கள் கிளைச்சிறைகள், 8 பெண்கள் கிளைச்சிறைகள், 2 ஆண்கள் தனிக் கிளைச்சிறைகள், 2 பெண்கள் தனிக் கிளைச்சிறைகள், 3 பார்ஸ்டல் பள்ளிகள் (வளரிளம் குற்றவாளிகளின் சீர்திருத்தப் பள்ளிகள்) மற்றும் 3 திறந்த வெளிச்சிறைகள் என மொத்தம் 142 சிறைகள் இயங்கி வருகின்றன.

மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் மாவட்ட சிறைகள் கீழ்க் குறிப்பிட்டுள்ள இடங்களில் இயங்கி வருகின்றன: –

| **மத்திய சிறைகள்** | |
|---|---|
| 1. | மத்திய சிறை–1, புழல் |
| 2. | மத்திய சிறை–2, புழல் |
| 3. | மத்திய சிறை, வேலூர் |
| 4. | மத்திய சிறை, கடலூர் |
| 5. | மத்திய சிறை, சேலம் |
| 6. | மத்திய சிறை, கோயம்புத்தூர் |
| 7. | மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி |
| 8. | மத்திய சிறை, மதுரை |
| 9. | மத்திய சிறை, பாளையங்கோட்டை |

| பெண்கள் தனிச்சிறைகள் | |
| --- | --- |
| 1. | பெண்கள் தனிச் சிறை, புழல் |
| 2. | பெண்கள் தனிச் சிறை, வேலூர் |
| 3. | பெண்கள் தனிச் சிறை, திருச்சிராப்பள்ளி |
| 4. | பெண்கள் தனிச் சிறை, கோயம்புத்தூர் |
| 5. | பெண்கள் தனிச் சிறை, மதுரை |

| மாவட்டச்சிறைகள் | |
| --- | --- |
| 1. | மாவட்டச்சிறை, செங்கல்பட்டு |
| 2. | மாவட்டச்சிறை, தருமபுரி |
| 3. | மாவட்டச்சிறை, விழுப்புரம் |
| 4. | மாவட்டச்சிறை, நாகப்பட்டினம் |
| 5. | மாவட்டச்சிறை, ஆத்தூர் |
| 6. | மாவட்டச்சிறை, கோபிச்செட்டிப்பாளையம் |
| 7. | மாவட்டச்சிறை, திருப்பூர் |
| 8. | மாவட்டச்சிறை, புதுக்கோட்டை |
| 9. | மாவட்டச்சிறை, திண்டுக்கல் |
| 10. | மாவட்டச்சிறை, தேனி |
| 11. | மாவட்டச்சிறை, விருதுநகர் |
| 12. | மாவட்டச்சிறை, இராமநாதபுரம் |
| 13. | மாவட்டச்சிறை, பேரூரணி |
| 14. | மாவட்டச்சிறை, நாகர்கோவில் |

தனிச்சிறைகள், இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை கோயம்புத்தூர் மாவட்டம் சிங்காநல்லூர், சேலம் மாவட்டம் சேலம், சிவகங்கை மாவட்டம் புரசடைஉடைப்பு ஆகிய இடங்களில் உள்ள திறந்த வெளி சிறைகளும், புழல், வேலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள பெண்கள் தனிச்சிறைகளும் ஆகும்.

மத்திய சிறைகளில், மரண தண்டனை, ஆயுள் தண்டனை மற்றும் மூன்று மாதங்களுக்கு மேல் தண்டனை பெற்றவர்கள், பெருங்குற்றங்களுக்காக தண்டனை பெற்றவர்கள், கொடுங்குற்றவாளிகள், தொடர்ந்து குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் அதிக ஊறு விளைவிக்கக் கூடியவர்கள், கடன் பெற்று செலுத்த இயலாமல் சிறைப்படுபவர்கள் மற்றும் தடுப்புக் காவல் சிறைவாசிகள் வைக்கப்படுகின்றனர். அதேவேளையில், நீதிமன்றகாவல் / விசாரணை சிறைவாசிகள் அந்தந்த வகைப்பாட்டின்படி வெவ்வேறு தொகுதிகளில் தனித்தனியே பிரித்து வைக்கப்படுகின்றனர். வெளிநாட்டைச் சார்ந்த அனைத்து வகையான சிறைவாசிகளும் சென்னை, புழல் மத்திய சிறை வளாகத்தில் வைக்கப்படுகின்றனர்.

நீதிமன்ற காவல் /விசாரணை சிறைவாசிகள் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களால் மூன்று மாத காலத்திற்கும் குறைவான தண்டனை விதிக்கப்பட்டவர்கள் அந்தந்த மாவட்டச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். மேலும், முக்கிய வழக்குகளில் தொடர்புடைய விசாரணை சிறைவாசிகள் பூவிருந்தவல்லி தனிக் கிளைச்சிறையிலும், மற்ற சாதாரண குற்றங்கள் புரிந்த விசாரணை சிறைவாசிகள் தனிக் கிளைச்சிறைகளிலும், கிளைச்சிறைகளிலும் வைக்கப்படுகின்றனர்.

மரண தண்டனை மற்றும் ஒரு மாதத்திற்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பெண் சிறைவாசிகள் மற்றும் வழக்கமாக குற்றம் புரியும் பெண் சிறைவாசிகள் பெண்களுக்கான ஐந்து தனிச்சிறைகளில் வைக்கப்படுகின்றனர். சாதாரண குற்றங்கள் புரியும் பெண் விசாரணை சிறைவாசிகள் தனிக்கிளைச் சிறைகளிலும் மற்றும் பெண்கள் கிளைச்சிறைகளிலும் வைக்கப்படுகின்றனர். பெண்களுக்கான சிறைகள் முழுவதும் பெண் சிறைப்பணியாளர்களால் மட்டுமே நிருவகிக்கப்படுகின்றன.

விவசாய பின்னணி உடைய 21 வயதிலிருந்து 55 வயதிற்குட்பட்ட திடமான உடல்நிலை மற்றும் மனநிலை, நன்னடத்தை, எளிதில் உணர்ச்சிவசப்படாத தன்மை உள்ள மற்றும் சிறைவாசிகள் அவர்களின் விருப்பத்தின் பேரில் திறந்த வெளிச்சிறைகளுக்கு மாற்றம் செய்யப்படுகின்றனர்.

பார்ஸ்டல் பள்ளிகள் சட்டம் 1925–ன் படி தண்டனைப் பெற்ற 18 முதல் 21 வயதுக்குட்பட்ட வளரிளம் குற்றவாளிகள், புதுக்கோட்டையில் உள்ள மாவட்டச்சிறை (ம) வளரிளம் குற்றவாளிகளின் சீர்திருத்தப் பள்ளியில் வைக்கப்படுகின்றனர்.

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து சிறைகளின் சிறைவாசிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 24,342 ஆகும். சிறைவாரியான அங்கீகரிக்கப்பட்ட இடவசதி பிற்சேர்க்கை–II–ல் வழங்கப்பட்டுள்ளது.

31.05.2024 அன்றைய நிலவரப்படி, மாநிலத்தில் உள்ள சிறைகளில் மொத்தம் 21,470 சிறைவாசிகள் வைக்கப்பட்டுள்ளனர். வயது வாரியான சிறைவாசிகளின் விவரம் பின்வருமாறு: –

| வயது பிரிவு | சிறைவாசிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 18–20 | 1245 |
| 21–25 | 4374 |
| 26–30 | 3846 |
| 31–35 | 3039 |
| 36–40 | 2723 |
| 41–50 | 3603 |
| 51–60 | 1771 |
| 61–70 | 691 |
| 71–80 | 165 |
| 80 வயதிற்கு மேல் | 13 |
| **மொத்தம்** | **21470** |

## IV. சிறை நிருவாகப் பிரிவுகள்

இத்துறையின் பயனுள்ள நிருவாகம் மற்றும் சீரிய செயல்பாட்டிற்காக பின்வரும் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:–

(அ) நுண்ணறிவு மற்றும் விழிப்புப்பணி பிரிவு

(ஆ) நன்னடத்தைப் பிரிவு

(இ) தொழில்நுட்பப் பிரிவு

(ஈ) மோட்டார் வாகனப் பிரிவு

(உ) சட்ட ஆலோசனைப் பிரிவு

## (அ) நுண்ணறிவு மற்றும் விழிப்புப்பணி பிரிவு

காவல் துறையிலிருந்து மாற்றுப் பணியில் பணியமர்த்தப்பட்ட 20 அலுவலர்கள் மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையைச் சேர்ந்த 13 அலுவலர்களுடன் மொத்தம் 33 பணியாளர்களைக் கொண்ட "நுண்ணறிவு மற்றும் விழிப்புப்பணி பிரிவு" காவல்துறை துணை கண்காணிப்பாளர் தலைமையில் இயங்கி வருகிறது.

இப்பிரிவு, சிறைவாசிகள் மற்றும் பணியாளர்களின் நடவடிக்கைகளை கண்காணித்து, சிறைகள் மற்றும் சிறைவாசிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு முக்கியமான மற்றும் நுட்பமான தகவல்களை சேகரித்து, நுண்ணறிவு தகவல்களை இதரப் புலனாய்வு அமைப்புகளுடன் பரிமாறிக்கொள்வதன் மூலம், சிறைகளை திறம்பட நிருவகிப்பதற்கும் மற்றும் மேலாண்மை செய்வதற்கும் உதவுகிறது.

## (ஆ) நன்னடத்தைப் பிரிவு

"நன்னடத்தைப் பிரிவானது" சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் கீழ் 1946–ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் இப்பிரிவின் தலைவர்

ஆவார். அவருக்கு உதவியாக 12 மண்டல நன்னடத்தை அலுவலர்களும் மற்றும் 64 நன்னடத்தை அலுவலர்களும் பணியாற்றுகின்றனர்.

நன்னடத்தை அலுவலர்கள் சிறைகளைப் பார்வையிட்டு சிறைவாசிகளை நேர்காணல் செய்து அவர்களது குழந்தைகளின் கல்வி, குடும்ப உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடன் வசதி மற்றும் தண்டனை சிறைவாசிகளுக்கு விடுதலைக்குப் பின்னர் வேலைவாய்ப்பு ஏற்படுத்தல் போன்றவற்றை நிறைவேற்றுவதற்காக அவர்கள், சிறைவாசிகளுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் இடையே ஒரு பாலமாக செயல்பட்டு வருகின்றனர். மேலும் அவர்கள், காவல் நிலைய சிறைவைப்பு அறைகளில் ஆய்வு செய்து மனித உரிமை மீறல் ஏதும் இல்லை என்பதையும் உறுதி செய்கின்றனர்.

நன்னடத்தை அலுவலர்கள், நன்னடத்தையின் பேரில் விடுதலை செய்யப்படும் குற்றவாளிகளை கண்காணிப்பதுடன், குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம், 1958 மற்றும் தமிழ்நாடு பார்ஸ்டல் பள்ளிகள் சட்டம், 1925 ஆகியவற்றை நடைமுறைபடுத்துவதற்கு, குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு உதவிபுரிகின்றனர்.

குற்றவாளிகளின் நடத்தை மற்றும் வாழ்க்கைச்சூழல் தொடர்பான முதற்கட்ட விசாரணை மேற்கொண்டு, நீதிமன்றங்களுக்கு அறிக்கை அளிப்பதன் மூலம், முதன்முறை குற்றவாளிகளை சிறைகளுக்கு அனுப்புவதைத் தவிர்த்து சில நிபந்தனைகளின் அடிப்படையில், நன்னடத்தை குற்றவாளிகளை நிருவகிப்பது இவர்களின் முக்கியப் பணியாகும்.

**(இ) தொழில்நுட்பப் பிரிவு**

தலைமை அலுவலகத்தில், ஒரு ஆய்வாளர் (தொழில்நுட்பம்) மற்றும் அனைத்து மத்திய சிறைகள், பார்ஸ்டல் பள்ளி புதுக்கோட்டை ஆகியவற்றில் தலா ஒரு சார்பு ஆய்வாளர் (தொழில்நுட்பம்) ஆகியோரைக் கொண்ட "தொழில்நுட்பப் பிரிவு", .சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் உள்ள நவீன கருவிகள் மற்றும் சாதனங்களை சிறந்த முறையில் கையாளவும், பராமரிக்கவும் அமைக்கப்பட்டுள்ளது.

**(ஈ) மோட்டார் வாகனப் பிரிவு**

ஒரு காப்பு காவல் ஆய்வாளர் (வகை.2) தலைமையின் கீழ், இத்துறையில் பயன்படுத்தப்பட்டு வரும் அனைத்து வாகனங்களின் பராமரிப்பு மற்றும் கண்காணிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**(உ) சட்ட ஆலோசனைப் பிரிவு**

இத்துறை தலைமை அலுவலகத்தில், சட்ட ஆலோசனைப் பிரிவு (Legal Cell) ஒன்று, குற்ற வழக்கு தொடர்வு இயக்குநரகத்திலிருந்து மாற்றுப்பணியில் பணிபுரியும் அரசு உதவி குற்றவியல் வழக்குரைஞர் (நிலை–1) தலைமையில், சட்ட ஆலோசனைகள் வழங்கிடவும், நீதிமன்ற வழக்குகளை கையாளும் அலுவலர்களுக்கு உதவிடும் வகையிலும் செயல்பட்டு வருகிறது.

**V. மனிதவள மேம்பாடு**

**(i) பணியாளர் தேர்வு**

இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) பணியிடங்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்படுகின்றன. தற்போது 83 ஆண் மற்றும் 3 பெண் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

உதவி சிறை அலுவலர்கள் நேரடி நியமனமாகவும் மற்றும் தகுதியுடைய முதல் தலைமை சிறைக் காவலர்கள் பதவி உயர்வு மூலமாகவும் 1 : 1 என்ற விகிதத்தில் தேர்வு

செய்யப்படுகின்றனர். தற்போது 54 ஆண் உதவி சிறை அலுவலர்கள் மற்றும் 5 பெண் உதவி சிறை அலுவலர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு விரைவில் பணி அமர்த்தப்பட உள்ளனர். உதவி சிறை அலுவலர் பதவிக்கான நேரடி நியமனத் தேர்வு, அரசாணை (நிலை) எண்.70, உள்(சிறை.2) துறை, நாள் 29.01.2024–ல் ஆணையிடப்பட்டுள்ளவாறு இனிவருங்காலங்களில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு பதிலாக தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும்.

சிறை அலுவலர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடி நியமனமாகவும் மற்றும் துணை சிறை அலுவலர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலமாகவும், 1 : 2 என்ற விகிதத்தில் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படுகின்றனர். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ள ஐந்து சிறை அலுவலர்கள் விரைவில் பணியமர்த்தப்பட உள்ளனர்.

நன்னடத்தை அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடி நியமனமாகவும் மற்றும் உதவியாளர் பதவியிலிருந்து

பதவி உயர்வு மூலமாகவும், 2:1 என்ற விகிதத்தில் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படுகின்றனர். தற்பொழுது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ள நான்கு நன்னடத்தை அலுவலர்கள் பணியில் இணைந்துள்ளனர்.

மன இயல் நிபுணர் பதவிக்கான பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடி நியமனமாகவும் மற்றும் நன்னடத்தை அலுவலர் பதவியிலிருந்து பணி மாற்றல் மூலமாகவும், 1 : 1 என்ற விகிதத்தில் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டிலிருந்து நாளது தேதிவரை, இத்துறையில், 255 நபர்கள் பல்வேறு பதவிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளதோடு, 170 காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் அறிவிக்கை வெளியிடப்பட்டு, தேர்வு செய்யும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளது.

**(ii) பயிற்சி**

**அ) சிறைகள் மற்றும் சீர்திருத்த நிருவாகப் பயிற்சியகம் (APCA), வேலூர்**

சிறைத்துறையில் உள்ள உதவி சிறை அலுவலர் முதல் சிறைத்துறை துணைத்தலைவர் வரை உள்ள அலுவலர்களுக்கு சீர்திருத்தும் முறைகள் மற்றும் சிறை மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கும் பொருட்டு தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய ஐந்து தென்மாநிலங்களின் கூட்டுப் பயிற்சி மையமான, சிறைகள் மற்றும் சீர்திருத்த நிருவாகப் பயிற்சியகம் (APCA), வேலூரில், 1979 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சியகத்தின் செலவினத்தை உறுப்பு மாநிலங்கள் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

2023–2024 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 121 சிறைப் பணியாளர்கள் வேலூரில் உள்ள சிறைகள் மற்றும் சீர்திருத்த நிருவாக பயிற்சியகத்தில் பல்வேறு பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.

**ஆ) சிறைக் காவலர் பயிற்சி**

புதிதாக தேர்வு செய்யப்படும் சிறைக்காவலர்களுக்கு அடிப்படை பயிற்சி அளிக்க, வேலூர், மத்தியசிறை, கண்காணிப்பாளரை

முதல்வராகக் கொண்ட சிறைக்காவலர் பயிற்சிப் பள்ளி, வேலூரில் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சிப் பள்ளியில் ஒரே நேரத்தில் 130 சிறைக் காவலர்களுக்கு பயிற்சி அளிக்கும் வசதி உள்ளது. மேலும் திருச்சிராப்பள்ளியில் தற்காலிக சிறைக்காவலர் பயிற்சிப்பள்ளி ஒன்றும் கூடுதலாக இயங்கி வருகிறது. அதில் 2023-2024 ஆம் ஆண்டில் 138 ஆண் மற்றும் 8 பெண் இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். புதியதாக தேர்ந்தெடுக்கப்படும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு அளிக்கப்படும் ஆறு மாத கால அடிப்படை பயிற்சியில் உடற்பயிற்சி, ஆயுதப் பயிற்சி, சிறை மேலாண்மை மற்றும் விதிமுறைகள் பற்றிய அடிப்படை அறிவு ஆகியவற்றுடன் மனித உரிமைகள் பற்றிய சிறப்புப் பயிற்சியும் அடங்கும்.

இரண்டாம் நிலை சிறைக் காவலர், முதல் நிலை சிறைக் காவலர், முதல் தலைமை சிறைக் காவலர், உதவி சிறை அலுவலர் மற்றும் துணைச் சிறை அலுவலர் ஆகியோருக்கு வேலூர் காவலர் பயிற்சி பள்ளி / திருச்சிராப்பள்ளி தற்காலிக காவலர் பயிற்சிப் பள்ளியில் குறிப்பிட்ட கால இடைவெளியில் புத்தாக்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

சென்னையிலுள்ள, காவல்துறை அதிரடிப்படை பயிற்சிப் பள்ளி வாயிலாக வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயலிழக்கச் செய்யும் பயிற்சி, தற்காப்புக் கலைகளான, கராத்தே, சிலம்பம், ஆயுதமின்றி தனித்து நின்று போராடுதல் ஆகிய பயிற்சிகளோடு அதிரடிப்படை பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.

**இ) பிற பயிற்சிகள்**

இத்துறையில் உள்ள அலுவலர்கள் தேசிய மற்றும் பிற மாநில அளவிலான பயிற்று நிறுவனங்களில் நடத்தப்படும் பல்வேறு வகையான பயிற்சித் திட்டங்களில் பங்கேற்கின்றனர். 2023-2024 ஆம் ஆண்டில் இத்துறையைச் சார்ந்த 60 அலுவலர்கள் புதுடில்லியில் உள்ள காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், லோக்நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண் தேசிய குற்றவியல் மற்றும் தடயவியல் பயிற்சி நிறுவனம் மற்றும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் ஆகியவற்றால் நடத்தப்படும் மனித உரிமைகள் மற்றும் சிறை மேலாண்மை குறித்த தேசிய அளவிலான பயிற்சிகளில் பயிற்சி பெற்றுள்ளனர்.

இத்துறையில் பணிபுரியும் சார்நிலை அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 2023-2024-ஆம் ஆண்டில் 1065 பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## VI. சிறை பாதுகாப்பு

### (i) உயர் பாதுகாப்பு தொகுதிகள்

அனைத்து மத்திய சிறைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் தொடர்புடைய கடுங்குற்றங்கள் புரிந்த சிறைவாசிகளை அடைப்பதற்கு உயர் பாதுகாப்பு தொகுதிகள் உள்ளன. சிறைவாசிகளின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் சிறையிலிருந்து தப்பிச் செல்வதைத் தடுக்கும் வகையில் இத்தொகுதிகள் சிறைப் பணியாளர்களால் சிறப்பு கவனத்துடன் பாதுகாவல் செய்யப்படுகின்றன. அனைத்து உயர் பாதுகாப்பு சிறைவாசிகளும் தினசரி சோதனை செய்யப்படுவதுடன் குறிப்பிட்ட கால இடைவெளியில் உயர் அலுவலர்களால் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

கோவை, மத்திய சிறையின் வெளிச்சுற்று பாதுகாப்பு, மத்திய பாதுகாப்பு காவல் படையினராலும், கடலூர் மத்திய சிறையின் வெளிச்சுற்று பாதுகாப்பு

சிறை காவலர்களாலும், மற்ற மத்திய சிறைகளின் வெளிச்சுற்று பாதுகாப்பு தமிழ்நாடு சிறப்பு காவல் படையினராலும் மேற்கொள்ளப்படுகின்றன.

சிறைகளில் எவ்வித அசம்பாவித நிகழ்வும் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு நாசவேலை தடுப்புச் சோதனைகளும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் உள்ளூர் காவல்துறையினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறைவாசிகளை நேர்காணல் செய்ய/சந்திக்க வரும் பார்வையாளர்களும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

**(ii) மோப்ப நாய் பிரிவு**

சிறைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்திடவும், சிறையில் தடை செய்யப்பட்ட பொருட்களை கண்டறியவும், 18 மோப்ப நாய்களைக் கொண்ட மோப்ப நாய் பிரிவு செயல்பட்டு வருகிறது.

**(iii) மின்னணு திறப்பான் மேலாண்மை அமைப்பு (Electronic Key Management System)**

ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த வழக்கமான பூட்டு சாவி முறைக்கு பதிலாக சோதனை

முறையில் மத்திய சிறை–I, மத்திய சிறை–II, மற்றும் பெண்கள் தனிச்சிறை, புழல் ஆகிய சிறைகளில் மின்னணு திறப்பான் மேலாண்மை அமைப்பு (Electronic Key Management System) புது முயற்சியாக 2019–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

**(iv) அலைபேசி மற்றும் இரும்பு உலோகம் கண்டறியும் கருவிகள் (Security Poles)**

தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் (TANII) கீழ் 2015–ஆம் ஆண்டு, அலைபேசி மற்றும் இரும்பு உலோக பொருட்கள் சிறைக்குள் கொண்டு வருவதை கண்டறியும் பொருட்டு 9 மத்திய சிறைகள் மற்றும் 3 பெண்கள் தனிச் சிறைகளில் 12 பாதுகாப்புத் தூண்கள் (Security Poles) நிறுவப்பட்டன.

**(v) நடைப்பேசி (Walkie Talkie)**

ஏற்கனவே, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறை, புழல், வேலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (வளரிளம் குற்றவாளிகளின் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டைஆகியவற்றில் உபரி மின்கலத்துடன் கூடிய 380 புதிய நடைப்பேசி (Walkie Talkie) கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மத்திய சிறைகள்–I, II, புழல், திருச்சிராப்பள்ளி மற்றும்

கோயம்புத்தூர் ஆகிய சிறைகளில் 4 ரிப்பீட்டர் செட்டுகளும் நிறுவப்பட்டுள்ளன.

2023–2024–ஆம் ஆண்டில் மின்னனு தொழில்நுட்பத்துடன் கூடிய 450 நடைபேசிகள் (Digital Mobile Radio Walkie Talkie) மற்றும் துணைக் கருவிகளுடன் கூடிய 15 ரிப்பீட்டர் செட்டுகள் ரூ.300 இலட்சம் செலவில் கொள்முதல் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

**(vi) மறைகாணி கேமராக்கள் (CCTV Cameras)**

கண்காணிப்பை மேம்படுத்துவதில் மறைகாணி கேமராக்கள் சமீப காலங்களில் முக்கியப் பங்கு வகிப்பதை கருத்தில் கொண்டு, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் முக்கிய இடங்களில் சிறைவாசிகளின் நடவடிக்கைகளையும், பார்வையாளர்களையும் கண்காணிக்கும் வகையில் ஏற்கனவே 556 மறைகாணி கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் 2023–2024–ஆம் ஆண்டில் 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச்சிறைகள், 14 மாவட்டச் சிறைகள், 105 கிளைச் சிறைகள் மற்றும் 3 திறந்த வெளிச் சிறைகளுக்கு 1156 புதிய மறைகாணி கேமராக்கள்

ஒப்படைக்கப்பட்டுள்ளன. சிறைகளில் ஏற்படும் நிகழ்வுகளை கண்காணிக்கும் பொருட்டு 8 மத்திய சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளில் காணொளிச் சுவர் வசதி நிறுவ அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.1700 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(vii) உடலோடு அணியும் கேமரா (Body Worn Cameras) மற்றும் சேவையகம் (Server)**

சிறைகள் மற்றும் சிறைவாசிகளின் நடவடிக்கைகள் மற்றும் நடமாட்டத்தை தீவிரமாக கண்காணிக்கும் பொருட்டு 9 மத்திய சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு 50 உடலோடு அணியும் கேமராக்களும் மற்றும் சிறைகள் மற்றும் சீர்த்திருத்தத் பணிகள் துறையின் தலைமை அலுவலகத்தில் அது தொடர்பான சேவையகம் (Server) ஒன்றும் ரூ.49.98 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. சிறைவாசிகள் தங்களது நடமாட்டம்/செயல்பாடுகள் கண்காணிக்கப்படுவதை அறிவதால், தேவையில்லாமல் ஒரு சிறைத் தொகுதியை விட்டு வேறொரு சிறைத் தொகுதிக்கு செல்வது கட்டுப்படுத்தப்படுவதுடன் களப்பணியாளர்களுக்கு கூடுதல் பாதுகாப்பை வழங்குகிறது. உடல் அணிந்த

கேமராக்கள் சிறைவாசிகளின் ஆக்ரோஷம் மற்றும் வன்முறையை கட்டுப்படுத்தவும், அவர்களது நடத்தையை மேம்படுத்தவும் உதவுகின்றன.

**(viii) சிறைத்துறைத் தலைமை அலுவலக கட்டுப்பாட்டு அறையில் காணொளிச்சுவர் (Video Wall)**

பல்வேறு சிறைகளின் செயல்பாடுகளை தலைமையகத்தில் கண்காணிக்கும் வகையில், 2021–ஆம் ஆண்டு, ரூ.50 இலட்சம் செலவில் காணொளிச் சுவர் ஒன்று சிறைத்துறைத் தலைமை அலுவலக கட்டுப்பாட்டு அறையில் நிறுவப்பட்டுள்ளது.

**(ix) செல்லிடப்பேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள் (Cell Phone Jammers)**

செல்லிடப்பேசி சமிக்ஞைகளை இடைமறிக்க செல்லிடப்பேசி செயலிழக்கும் கருவிகள் நிறுவப்படுகின்றன. 2015–2016–ஆம் ஆண்டில் மாநிலத்திலுள்ள 9 மத்திய சிறைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் நோக்கத்துடன் 12 உயர் பாதுகாப்பு தொகுதிகளில், செல்லிடப்பேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

## (x) ஊடுகதிர் அலகிடல் கருவிகள் (X–Ray Baggage Scanners)

போதைப் பொருட்கள், ஆயுதங்கள் மற்றும் பிற தடை செய்யப்பட்ட பொருட்கள் சிறையினுள் கடத்தப்படுவதை தடுக்கும் பொருட்டு, 2022–2023–ஆம் ஆண்டில் 9 மத்திய சிறைகளில் பழைய ஊடுகதிர் அலகிடல் கருவிகளுக்கு மாற்றாக புதிய கருவிகள் பொருத்தப்பட்டன. மேலும், 2023–2024–ஆம் ஆண்டில், ரூ.272.00 இலட்சம் செலவில் புதியதாக ஊடுகதிர் அலகிடல் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு 13 மாவட்டச் சிறைகளில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், "சிறை பாதுகாப்பு பணியாளர்களுக்கு ஊடுகதிர் அலகிடல் கருவியை கையாளுதல்" தொடர்பாக, இரண்டு நாள் பயிற்சி, 03.04.2024 முதல் 10.04.2024 வரை 4 தொகுதிகளாக சென்னை, பயணிகள் விமான போக்குவரத்து பாதுகாப்பு பணியக மண்டல இயக்குநர் மூலம் நடத்தப்பட்டது. மொத்தம் 140 பணியாளர்கள் பயிற்சி பெற்றனர்.

## VII. சிறைகளை நவீனமயமாக்கல்

### (i) சிறைவாசிகள் தகவல் மேலாண்மை அமைப்பு (e–prison)

தேசிய தகவல் மையத்தின் மூலம் வடிவமைக்கப்பட்ட e–சிறை (e–prison) மென்பொருளில், ஒவ்வொரு சிறைகளிலும் உள்ள சிறைவாசிகளின் தரவுகள் நிகழ் நேரத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

சிறைவாசிகள் தங்களது வழக்கின் நிலை, தண்டனை, விடுதலை பெறும் நாள், விடுப்பு, ஊதியம், பார்வையாளர்கள் வருகை போன்ற விவரங்களை எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகளில் தமிழ் மொழியில் மின் தொடுதிரை (Electronic Touch Screen Kiosk) அமைக்கப்பட்டுள்ளது.

2021–2022–ஆம் ஆண்டில் சிறைவாசிகளின் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய மின்னணு அட்டைகள் 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**(ii) காணொலி கலந்துரையாடல் வசதி (Video Conferencing Facility)**

சிறைகளையும் நீதிமன்ற வளாகங்களையும் மின்னணு முறையில் இணைக்கும் காணொலி கலந்துரையாடல் வசதி, சிறைவாசிகளை நேரடியாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமல், நீதிமன்றக் காவலை நீட்டிக்க சிறந்த வாய்ப்பாகும். இதன் மூலம் வழிக்காவலின்போது சிறைவாசிகள் தப்பித்தல் மற்றும் சிறைவாசிகள் மீதான தாக்குதல்கள் போன்ற அசம்பாவித நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்கப்படுவதுடன், வழிக்காவலுக்கும், போக்குவரத்திற்கும் ஏற்படும் செலவைக் குறைக்கவும் இவ்வமைப்பு வழிவகை செய்கிறது.

தற்போது, மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறைகள் மற்றும் கிளைச் சிறைகள் உட்பட 117 சிறைகள், 403 நீதிமன்றங்களுடன் காணொலி கலந்துரையாடல் வசதி மூலம் இணைக்கப்பட்டுள்ளன. கடந்த 4 ஆண்டுகளில் நீதிமன்ற காவல் நீட்டிப்பிற்காக 5,04,471 நேர்வுகளில் காணொலி கலந்துரையாடல் மூலம் நீதிமன்றங்களில் சிறைவாசிகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். அதன் விவரம் பின்வருமாறு : –

| வ. எண். | ஆண்டு | சிறைவாசிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 2021 | 94,081 |
| 2. | 2022 | 1,51,703 |
| 3. | 2023 | 1,81,045 |
| 4. | மே – 2024 வரை | 77,642 |
| | **மொத்தம்** | **5,04,471** |

சிறைவாசிகளின் நீதிமன்றக் காவல் நீட்டிப்பிற்காக காணொலி கலந்துரையாடல் மூலம் ஆஜர்படுத்தப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை, முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது 2023–ஆம் ஆண்டு 19 சதவீதம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**(iii) சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்தல் (Solar Power Generation)**

புழல் சிறை வளாகத்தில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் (TEDA) நிறுவப்பட்டுள்ள

சூரிய மின் உற்பத்தி அமைப்பு மின் கட்டத்துடன் (Grid) இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 471.93 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

**(iv) கனரக சலவை இயந்திரம் (Heavy Duty Laundry Machine)**

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் ரூ.60.00 இலட்சம் செலவில் 15 கனரக சலவை இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## VIII. சிறைவாசிகளின் நலன்

**(i) உணவு**

சிறைவாசிகளின் நலனுக்கான நிபுணர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில், சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்டு வந்த உணவு முறை மற்றும் உணவின் அளவு, 26 கோடி ரூபாய் செலவில் குறிப்பிட்ட உணவுகளை உள்ளடக்கிய சரிவிகித சத்துள்ள உணவாக (Balanced diet) மாற்றம் செய்து வழங்கப்பட்டு வருகிறது.

புதிய உணவு முறை கீழ்க்கண்ட உணவு வகைகளை உள்ளடக்கியதாகும்:–

| | |
|---|---|
| காலை | இட்லி, சட்னி சாம்பாருடன் கோதுமை உப்புமா, பொங்கல், கேழ்வரகு உப்புமா, தக்காளி சாதம், எலுமிச்சை சாதம், புதினா சாதம் |
| மதியம் | சாதம், சாம்பார், சப்பாத்தி, ரசம், காரக் குழம்பு, அவியல், பொரியல், கீரை, தயிர் |
| மாலை | கொண்டைக் கடலை, வேர்க் கடலை, பாசிப்பயிறு போன்ற சுண்டல் வகைகள் மற்றும் தேநீர். |
| இரவு | சாதம், சாம்பார், ரசம், சப்பாத்தி, காய்கறி கூட்டு / பொரியல் |
| அசைவம் | வாரத்தில் இரண்டு நாட்கள் அசைவம் சாப்பிடும் சிறைவாசிகளுக்கு 150 கிராம் கோழி இறைச்சி மற்றும் முட்டை |

பொங்கல் விழா, சுதந்திர தினம், காந்தி ஜெயந்தி போன்ற சிறப்பு நாட்களில் சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் சிறப்பு உணவிற்காக செலவிடப்படும் தொகை 2022–ஆம் ஆண்டு முதல் ரூ.50–லிருந்து ரூ.100–ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

சமையலறையில் உணவு தயாரிக்கவும், உணவினை எடுத்துச் செல்லவும் எவர்சில்வர் பாத்திரங்கள் பயன்படுத்தப்படுவதோடு,

சிறைவாசிகளுக்கு உணவு வகைகள் எவர்சில்வர் தட்டுகளிலும், குவளைகளிலும் பரிமாறப்பட்டு வருகிறது. இவ்வாண்டில், அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறைகளில் பயன்பாட்டிலிருந்த உலர் மற்றும் ஈரப்பத மாவு அரைக்கும் பழைய இயந்திரங்களுக்குப் பதிலாக புதிய இயந்திரங்களும், சமைத்த உணவினை சிறைவாசிகள் தொகுதிகளுக்கு எடுத்துச் சென்று வழங்கும் வகையில் மின்சார வண்டிகளும் (e–auto) வழங்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன.

**(ii) குடிநீர் சுத்திகரிப்பு சாதனங்கள் (Reverse Osmosis Plant)**

குடிநீர் சுத்திகரிப்பு செய்யும் சாதனங்கள் (**RO Plant**) அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் அனைத்து மத்திய சிறைகளில் உள்ள பணியாளர் குடியிருப்புகளில் நிறுவப்பட்டுள்ளன.

**(iii) உடை**

தமிழ்நாடு சிறை விதிகள், 1983–ல் வரையறுக்கப்பட்டவாறு, சிறைவாசிகளுக்கு உடைகளும், படுக்கைகளும் வழங்கப்படுகின்றன. சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள பெண் தண்டனை

சிறைவாசிகளுக்கு நீல நிற புடவை மற்றும் வெள்ளை நிற ரவிக்கையும், ஆண் தண்டனை சிறைவாசிகளுக்கு டெரிகாட்டன் முழுக்கால் சட்டையும், அரைக்கை மேல் சட்டையும், பெரிய அளவிலான போர்வையும் வழங்கப்படுகின்றன. விசாரணை சிறைவாசிகள் தமக்குத் தேவையான சொந்த உடைகளை அணிந்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். போதிய உடைகள் இல்லாமலிருக்கும் விசாரணை சிறைவாசிகளுக்கு அரசு செலவில் போதுமான உடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**(iv) சுகாதாரம் மற்றும் உடல்நலன் பேணுதல்**

மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறைகளில் சிறை மருத்துவமனைகள் உள்ளன. சிறைவாசிகளின் மருத்துவ தேவைகளை முழு நேரமும் கவனித்திடும் பொருட்டு 9 மத்திய சிறைகள் மற்றும் 5 பெண்கள் தனிச்சிறைகள், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் தலா மூன்று உதவி மருத்துவர்கள் மற்றும் போதிய துணை மருத்துவப் பணியாளர்கள் உள்ளனர். தொடர் சிறப்பு சிகிச்சைத் தேவைப்படும் சிறைவாசிகள், சிறை மருத்துவமனைகளில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்படுகின்றனர். மல்டிசேனல் மானிடர்,

எண்டோட்டிராக்கியல் குழாய்கள், ஆக்சிஜன் சிலிண்டர் (Multichannel monitor, Endotracheal tubes, Ambubags, Oxygen cylinder) போன்ற உயிர்காக்கும் உபகரணங்கள் இந்த மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சிறப்பு சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகளை, வெளி மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்வதற்காக அவசர சிகிச்சை ஊர்திகள், அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள், மாவட்டச் சிறைகள், பெண்கள் தனிக் கிளைச் சிறைகள் மற்றும் பெண்கள் கிளைச் சிறைகள் ஆகிய சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சிறைவாசிகளுக்கு நோயினைக் கண்டறிந்து அதற்குத் தேவையான சிகிச்சை அளிக்கும் பொருட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. சிறைவாசிகளுக்கு நோய் தாக்காமல் தடுக்கும் பொருட்டு பொது மருத்துவம், கண், பல் போன்ற சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சிறைகளிலும் 100 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.

சிறைவாசிகளுக்கு எய்ட்ஸ் நோய் தாக்கத்தினை கண்டறியும் பரிசோதனை மேற்கொள்ள அனைத்து மத்திய சிறைகளிலும் ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையம் (ICTC) நிறுவப்பட்டுள்ளது. உரிய கலந்தாய்வுக்குப் பின்னர், அனைத்து சிறைவாசிகளும் எச்.ஐ.வி (H.I.V) பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். போதை பொருட்களுக்கு அடிமையான சிறைவாசிகளுக்கு முறையான சிகிச்சை அளிக்கும் பொருட்டு, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டையில் "மறுவாழ்வு மையங்கள்" அமைக்கப்பட்டுள்ளன.

சிறைவாசிகளிடையே தொற்று நோய் பரவுவதைத் தடுப்பதற்காக, கத்தி மூலம் முகச்சவரம் செய்யும் முறை கைவிடப்பட்டு, அதற்கு மாற்றாக, மறுபயன்பாடு இல்லாத சவர ரேசர்கள் (Disposable Razors) ஒவ்வொரு சிறைவாசிக்கும் மாதம் இரண்டு வீதம் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய வசதிகளுடன், 2019-2020-ஆம் ஆண்டில், அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறைகள், புழல் மற்றும்

திருச்சிராப்பள்ளியில் ரூ.1240.10 இலட்சம் செலவிலும், பூவிருந்தவல்லி, தனிக்கிளைச் சிறையில் ரூ.30.59 இலட்சம் செலவில் தொற்று நோய் தடுப்பு மற்றும் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**(v) பெண் சிறைவாசிகளின் பராமரிப்பு**

பெண் சிறைவாசிகள் சிறையினுள் அனுமதிக்கப்படும்போதே, பெண் உதவி மருத்துவ அலுவலரால் முறையான மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, பரிசோதனைக் குறிப்புகள் மருத்துவ அறிக்கையில் பதிவு செய்யப்படுகின்றன.

கருவுற்றிருக்கும் பெண் சிறைவாசிகளுக்கு மகப்பேறு காலம் வரை கர்ப்ப கால பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் பேறுகாலத்திற்குப் பின்னரும் தேவைக்கேற்ப உரிய சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. சிறைக்கு வெளியே பிரசவிக்க ஏதுவாக 15 நாட்கள் அவசரகால விடுப்பு வழங்கப்படுகிறது. பாலூட்டும் பெண் சிறைவாசிகள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு, அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு அரை லிட்டர் பால் வழங்கப்படுகிறது. மேலும், பெண் சிறைவாசிகளுக்கு விலையில்லா சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்படுகின்றன. தற்போது

திறந்த வெளிச்சிறைகளில் பணிபுரிய பெண் சிறைவாசிகள் அனுமதிக்கப்படுகின்றனர்.

தமிழ்நாடு சிறை விதிகள், 1983–ன் படி பெண் சிறைவாசிகளின் குழந்தைகளை குடும்பத்தினர் பராமரிக்க இயலாத நிலையில், 6 வயது வரை அக்குழந்தை தாயுடன் சிறையில் இருப்பதற்கு, அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வளரும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்தினை கருத்தில் கொண்டு, பெண் சிறைவாசிகளுடன் உள்ள ஒருவயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில், சத்தான குழந்தை உணவுகள் வழங்கப்படுவதுடன், குழந்தைகளை கவனித்துக் கொள்வதற்காக பெண்கள் தனிச் சிறைகளில் காப்பகம் மற்றும் மழலையர் பள்ளி செயல்பட்டு வருகின்றன.

**(vi) மன நலன்**

நீண்டகாலமாக சிறைகளில் அடைக்கப்படுவதன் காரணமாக சிறைவாசிகளுக்கு ஏற்படும் மன அழுத்தம் மற்றும் வன்முறை போக்கினை குறைத்து, தக்க சிகிச்சை அளித்திடும் பொருட்டு, 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச்

சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் மனஇயல் நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மன நல சிகிச்சைத் தேவைப்படும் சிறைவாசிகளுக்கு, அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவர்களைக் கொண்டும், தொடர்ந்து சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகளுக்கு, சென்னை அரசு மனநல காப்பகத்தில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

9 மத்திய சிறைகளிலும் தலா இரண்டு ஆலோசகர்கள் (Counsellors), 5 பெண்கள் தனிச்சிறைகள், மாவட்டச் சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி புதுக்கோட்டை ஆகியவற்றில் தலா ஒரு ஆலோசகரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் பணித்திறனை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதிய தொகை ரூ.15,000/–த்திலிருந்து மாதம் ஒன்றிற்கு ரூ.25,000/–ஆக உயர்த்தி 2022–2023–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

புதிதாக அனுமதிக்கப்படும் சிறைவாசிகளை சிறைச் சூழலுக்கு ஏற்ப தயார்படுத்துவதில், சமூக இயல் வல்லுநர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.

தண்டனை பெற்ற சிறைவாசிகளின் சமூகப் பின்னணி குறித்து ஆராய்ந்து, தகுந்த முறையில் தனிப்பட்ட வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் வழங்கிடவும், சிறைவாசிகளுடைய குடும்ப உறுப்பினர்களுடனான உறவை மேம்படுத்தும் நோக்கத்துடன், அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளில் தலா ஒரு சமூக இயல் வல்லுநர் பணிபுரிந்து வருகிறார்.

சிறைவாசிகள் தங்களுடைய குடும்பத்துடனான உறவினை தொடர்ந்து பராமரிக்கும் விதமாக நேர்காணல்களை ஏற்பாடு செய்தல், நிலம், சொத்து போன்ற உரிமையியல் பிரச்சினைகளை தீர்க்க உதவுதல், சிறைவாசிகள் அவர்களது விடுதலைக்குப் பின்னர் கண்ணியமாக வாழும் பொருட்டு சுயதொழில் மற்றும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல் உள்ளிட்ட சிறைவாசிகளின் நலனை கவனித்திடும் பொருட்டு, அனைத்து மத்திய சிறைகளிலும், பெண்கள் தனிச்சிறைகளிலும் நல அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2022-2023-ஆம் ஆண்டில் பெண்கள் தனிச்சிறை திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோவை ஆகியவற்றில் மகளிர் நல அலுவலர் பதவி அராசல்

தோற்றுவிக்கப்பட்டுள்ளது. நல அலுவலர்கள் சிறைவாசிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இடையே இணைப்பாளராக செயலாற்றுகிறார்கள்.

**(vii) சிறைவாசிகள் கேன்டீன்**

சிறைகளில் செயல்பட்டு வரும் "சிறைவாசிகள் கேன்டீன்" மூலம் தமிழ்நாடு சிறை நடைமுறை நூல், தொகுதி –III–ன்படி, அத்தியாவசிய மற்றும் அனுமதிக்கப்பட்ட பொருட்கள் சிறைவாசிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு காரணமாக 2022–2023–ஆம் ஆண்டு முதல் சிறைக் கேன்டீன்களில் பொருட்கள் வாங்கிட உச்சவரம்புத் தொகையானது வாரம் ஒன்றுக்கு "அ" வகுப்பு சிறைவாசிகளுக்கு ரூ.1000/– மற்றும் "ஆ" வகுப்பு சிறைவாசிகளுக்கு ரூ.750/– எனவும் உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**(viii) சிறைவாசிகளுடன் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் நேர்காணல்**

தமிழ்நாடு சிறை விதிகள், 1983ல் குறிப்பிட்டுள்ள நடைமுறையினை பின்பற்றி சிறைவாசிகள் அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களை நேர்காணல் மூலம் சந்திக்க/உரையாட

அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசிகள் அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் பார்வையாளர் நேர்காணல் அறையில் பேசும் பொழுது ஏற்படும் இரைச்சலை குறைத்து, சிறைவாசிகள் மற்றும் பார்வையாளர்கள் தெளிவாக உரையாடும் வகையில் உள்தொடர்பு (Intercom) தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**(ix) சிறப்பு நேர்காணல்**

வழக்குரைஞர்கள் சிறைவாசிகளை அனைத்து நாட்களிலும் நேர்காணல் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும், சனிக்கிழமையன்று வழக்குரைஞர்களுக்காக பிற்பகல் 1.00 மணிவரை சிறப்பு நேர்காணல் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரிக்குச் செல்லும் சிறைவாசிகளின் குழந்தைகள் மற்றும் பணிக்குச் செல்லும் சிறைவாசிகளின் வாழ்க்கைத் துணை ஆகியோரின் வசதிக்காக ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று, சிறப்பு நேர்காணல் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**(x) பார்வையாளர் மேலாண்மை திட்டம்**

சிறைவாசிகளைக் காண வரும் பார்வையாளர்கள் நேர்காணல் முறையை சீரமைத்திட, எளிய வழிமுறைகளைக் கொண்ட பார்வையாளர்

மேலாண்மைத் திட்டம் அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### (xi) சிறைவாசிகளுக்கான தொலைபேசி வசதி

2023–2024–ஆம் ஆண்டிலிருந்து அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், பார்ஸ்டல்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் திறந்த வெளிச் சிறைகளில் சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ள தொலைபேசி வசதி (ஆடியோ) அழைப்பு அளவை 3 நாட்களுக்கு ஒருமுறையும், மாதத்திற்கு 10 முறையும், ஒரு அழைப்பிற்கு 12 நிமிடங்கள் என உயர்த்தி வழங்கப்பட்டதோடு, காணொளி (வீடியோ) தொலைபேசி வசதியும் விரைவில் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

### (xii) ஆதார் பதிவு

சிறைவாசிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்கள் இல்லாத காரணத்தால், சிறைகளில் ஆதார் பதிவு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, ஆதார் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறைவாசிகள், சிறையிலிருந்து விடுதலை

செய்யப்பட்ட பின்னர் கண்ணியமாக வாழவும், அவர்களது வாழ்வாதாரத்திற்கு தேவையான வேலைவாய்ப்பு / கடன் உதவி பெற விண்ணப்பிக்கவும் இது உதவும்.

**(xiii) இலவச சட்ட உதவி**

சிறைவாசிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் இலவச சட்ட உதவி வசதியை மேலும் விரிவுபடுத்தும் வகையில் தமிழகத்தில் உள்ள அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள், மாவட்ட சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆணைக்குழு மூலமாக தனியாக இலவச சட்ட உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையத்தின் மூலம் சிறைவாசிகள் வழக்குத் தொடர்பான அனைத்து சட்ட உதவிகளையும் இலவசமாக பெற முடியும்.

சிறைவாசிகள் தங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு செய்யவும், பிணை கோரவும், வழக்கு விசாரணையினை நடத்தவும் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களை இந்த இலவச சட்ட உதவி மையங்கள் மூலமாக அணுக இயலும். சிறைவாசிகள் தங்களது வழக்கு விவரங்களை அறிந்து கொள்ளவும், வழக்கு சம்பந்தமான இதரபணிகளுக்கு உதவி புரியவும், சிறைவாசிகளுக்கிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட 40 சிறைவாசிகளுக்கு சட்ட தன்னார்வலர்களாக

செயல்படும் வகையில், தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணையம் மூலம் உரிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### (xiv) சிறை நீதிமன்றங்கள்

சிறு வழக்குகளுக்கு விரைவில் தீர்வு காணும் வகையிலும், சிறைகளில் இட நெருக்கடியைக் குறைக்கவும் அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் சிறை நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. நீதித்துறை நடுவர்கள் சிறை நீதிமன்றங்களுக்கு வருகை புரிந்து குற்றங்களை ஒப்புக் கொள்ளும் சிறைவாசிகளது வழக்குகளைத் தீர்வு செய்கின்றனர்.

சிறை நீதிமன்றங்களின் மூலமாக 2023–2024–ஆம் ஆண்டில், 1950 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

### (xv) அடையாள அணிவகுப்பு அறை

சாட்சியின் அடையாளத்தை பாதுகாப்பது முதன்மையானதாகும். அந்த வகையில் அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் மாவட்டச் சிறைகளில் ரூ.472.81 இலட்சம் செலவில் ஒரு வழி கண்ணாடி பொருத்தப்பட்ட அடையாள அணிவகுப்பு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**(xvi) தனிமனித கண்ணியம் மற்றும் மனித உரிமைகளை உறுதி செய்தல்**

சிறைவாசிகளின் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை கருத்திற்கொண்டு, சிறை அலுவலர்களுக்கு அளிக்கப்படும் அடிப்படை பயிற்சி உள்ளிட்ட அனைத்து பயிற்சிகளிலும் சிறைவாசிகளின் மனித உரிமைகள் தொடர்பான பாடத்திட்டங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், அனைத்து சிறைகளிலும் அடிப்படைத் தேவைகள் மற்றும் வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன.

உயர்நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதிபதிகள், மனித உரிமைகள் ஆணைய அலுவலர்கள் மற்றும் பிற உயர்அலுவலர்கள் சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் அடிப்படை வசதிகள் மற்றும் மருத்துவ சிகிச்சைகளை ஆய்வுசெய்து, சிறை நிருவாகத்தைப் பாராட்டி உள்ளனர். மேலும், அந்தந்த மாவட்ட உயர் அலுவலர்கள் அலுவல்சார் பார்வையாளர்களாகவும், பொது மக்களில் சமூக அக்கறையுள்ள பல்துறை வல்லுநர்கள் அலுவல்சாரா பார்வையாளர்களாகவும், நியமனம் செய்யப்பட்டு அவர்கள் சிறைகளில் வழக்கமான வருகை மற்றும் திடீர் ஆய்வு மேற்கொள்கின்றனர்.

## (xvii) சிறைவாசிகளின் குறைதீர்க்கும் செயலாக்க முறை

சிறை நிருவாகம், சிறைவாசிகளின் குறைகளை நிவர்த்தி செய்வதில் அதிக முன்னுரிமை அளிக்கிறது. சிறைவாசிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கும் பொருட்டு அனைத்து மத்திய சிறைகளிலும் மூடி முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் வேலை நாளன்று மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியால் இந்தப் புகார் பெட்டிகள் திறக்கப்பட்டு புகார்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

சிறைக் கண்காணிப்பாளர்கள் ஒவ்வொரு வாரமும் சிறைவாசிகளின் ஆய்வு அணிவகுப்பின் போது அவர்களது குறைகளைக் கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்து வருகின்றனர். தலைமை இயக்குநர், மற்றும் சரக சிறைத்துறை துணைத் தலைவர்கள் தங்களது வாலாயப்பார்வை /வருடாந்திர ஆய்வுகளின் போது சிறைவாசிகளின் குறைகளை கேட்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இதைத்தவிர, அமர்வு நீதிபதிகள் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர்களும் மாதம் ஒருமுறை சிறைகளுக்கு திடீர் வருகை புரிந்து சிறைவாசிகளிடம் குறை கேட்பதோடு சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் உள்ளிட்ட இதர வசதிகளை ஆய்வு செய்கின்றனர்.

## IX. சிறைவாசிகளின் சீர்திருத்தம்

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, சிறைவாசிகளின் சீர்திருத்தம், மறுவாழ்வு மற்றும் சமூக ஒருங்கிணைப்புக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### (i) சிறை நூலகம்

சிறைவாசிகள் மத்தியில், புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் அறிவுத் திறனை வளர்த்து பண்பட்டவர்களாக மாற்றுவதிலும், நல்ல சிந்தனைகள் மற்றும் உயரிய விழுமியங்களை விதைப்பதிலும், குடும்ப உறவுகளை மேம்படுத்தி மீண்டும் குற்றச்செயல்களில் ஈடுபடுவதை தடுப்பதிலும் சிறை நூலகங்கள் முக்கியப்பங்கு வகிக்கின்றன. ஒவ்வொரு மத்திய சிறையிலும் உள்ள சிறை நூலகங்களில் புத்தகங்கள், செய்தித்தாள்கள்

மற்றும் இதழ்களை வாசிக்க சிறைவாசிகள் அனுமதிக்கப்படுகின்றனர். அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள், கிளைச்சிறைகள், தனிக்கிளைச்சிறைகள் மற்றும் திறந்தவெளிச் சிறைகள் ஆகியவற்றில் உள்ள சிறை நூலகங்களுக்குத் தேவையான தளவாட பொருட்கள் மற்றும் கணினிகள் கொள்முதல் செய்ய 2023–2024–ஆம் நிதி ஆண்டில் ரூ.208.74 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சிறைவாசிகளின் சீர்திருத்தத்திற்காக 1500 புத்தகங்களை சிறை நூலகங்களுக்கு நன்கொடையாக வழங்கி உள்ளார்கள். மாநிலம் முழுவதும் நடத்தப்பட்ட புத்தகக் கண்காட்சிகளில் சுமார் 1,00,000–க்கும் மேற்பட்ட புத்தகங்கள் நன்கொடையாக பெறப்பட்டுள்ளன.

### (ii) சிறையில் கல்வி வசதி

சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதில் கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. அனைத்து சிறைவாசிகளுக்கும் (100 விழுக்காடு) கல்வி கற்பிக்கும் விதமாக, தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறையும், ஒன்றிய அரசின் மனிதவள

மேம்பாட்டு அமைச்சகமும் ஒருங்கிணைந்து பல திட்டங்களைத் செயல்படுத்தி வருகின்றன.

மாநில பள்ளிக்கல்வித் துறையின் சிறப்பு எழுத்தறிவு திட்டத்தின் மூலமாக மாநிலத்தில் உள்ள அனைத்து சிறைகளிலும் எழுதப்படிக்க தெரியாத சிறைவாசிகளுக்கு அடிப்படைக்கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. 2023–2024–ஆம் ஆண்டில் 1249 சிறைவாசிகளுக்கு அடிப்படைக் கல்வி கற்பிப்பதற்காக அரசு ரூ.25.00 இலட்சம் வழங்கியுள்ளது.

சிறைவாசிகள் ஏற்கனவே பெற்றுள்ள கல்வித் தகுதியின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கல்வி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:–

அ) அடிப்படைக் கல்வி,

ஆ) தொடக்கக் கல்வி,

இ) உயர்/மேல்நிலைக் கல்வி,

ஈ) பட்டயம் / சான்றிதழ் படிப்பு

உ) திறந்தவெளி பல்கலைக்கழகங்கள் மூலமாக இளநிலை, முதுநிலை பட்டப்படிப்பு

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை

ஆகியவற்றில் தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஆரம்பப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. 2023–2024ஆம் ஆண்டில் 12–ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய 125 சிறைவாசிகளில் 116 சிறைவாசிகளும், 11–ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய 191 சிறைவாசிகளில் 178 சிறைவாசிகளும், 10–ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய 260 சிறைவாசிகளில் 228 சிறைவாசிகளும் தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும் 311 சிறைவாசிகள் 8–ம் வகுப்பு தேர்வு எழுதியுள்ளனர், அதன் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகிறது.

2023–2024ஆம் ஆண்டில் மொத்தம் 9,457 சிறைவாசிகள் கீழ்க் குறிப்பிட்டுள்ள பல்வேறு பாடப்பிரிவுகளைத் தொடர்ந்து பயின்று வருகின்றனர்:

| **பாடப்பிரிவு** | **சிறைவாசிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| பள்ளிக் கல்வித் துறையால் நடத்தப்படும் அடிப்படை எழுத்தறிவு கல்வித் திட்டம் | 1,781 |
| அடிப்படைக் கல்வி (7ஆம் வகுப்பு வரை ஆயத்தப் படிப்பு) | 3,454 |
| எழுத்தறிவு திட்டக்கல்வி (மாநில ஆதார மையம் வழியாக) | 2,893 |

| **பாடப்பிரிவு** | **சிறைவாசிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| கணினி முதுகலை பட்டப்படிப்பு | 3 |
| வணிக மேலாண்மை முதுகலை பட்டப்படிப்பு | 19 |
| கலை / அறிவியல் முதுகலை பட்டப்படிப்பு | 31 |
| கலை / அறிவியல் / வணிகவியல் / இலக்கியம் இளங்கலை பட்டப்படிப்பு | 86 |
| வணிக மேலாண்மை இளங்கலை பட்டப்படிப்பு | 26 |
| 8 ஆம் வகுப்பு (311) , 10ஆம் வகுப்பு (260), 11ஆம் வகுப்பு (191) மற்றும் 12 ஆம் வகுப்பு ( 125) | 887 |
| பட்டயப்படிப்பு / சான்றிதழ் படிப்பு | 277 |
| **மொத்தம்** | **9,457** |

**இலவச உயர் கல்வி**

இளங்கலை, முதுகலை, சான்றிதழ் படிப்புகள், தொழிற் கல்வி ஆகியவற்றினை பயிலும் சிறைவாசிகளுக்கு இலவச கல்வி வழங்க தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்திற்கு அரசு ஆணையிட்டுள்ளது. அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. கல்வித் தகுதி பெற்ற சிறைவாசிகள் சிறையில் வகுப்புகள் நடத்துவதற்கு ஈடுபடுத்தப்படுகின்றனர்.

**தொழிற் பயிற்சி நிலையம் (ITI)**

திருச்சிராப்பள்ளி, மத்திய சிறையில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. தொழிற் பயிற்சி நிலையத்தில் 2023–2024–ஆம் ஆண்டில் 192 சிறைவாசிகள் பல்வேறு வகையான, கீழ்க்காணும் தொழிற்கல்வி பாட திட்டங்களில் பயின்று வருகின்றனர்: –

| வ. எண் | தொழிற் பயிற்சியின் பெயர் | காலம் | சிறைவாசிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மொத்தம் |
| 1 | பொருத்துநர் | இரண்டு ஆண்டுகள் | 20 | 10 | 30 |
| 2 | மின் வினைஞர் | இரண்டு ஆண்டுகள் | 20 | 14 | 34 |
| 3 | கணினி இயக்குநர் மற்றும் மென்பொருள் உதவியாளர் | ஓராண்டு | 48 | – | 48 |
| 4 | வெட்டுதல் மற்றும் தைத்தல் | ஓராண்டு | 40 | – | 40 |
| 5 | பற்ற வைப்பவர் (எரிவாயு மற்றும் மின்சாரம்) | ஓராண்டு | 40 | – | 40 |
| **மொத்தம்** | | | **168** | **24** | **192** |

**iii) சிறை தொழிற்சாலைகள் மற்றும் திறன் மேம்பாடு**

சிறைவாசிகள் விடுதலைக்குப் பின்னர், வேலை வாய்ப்பு பெற அல்லது சொந்தமாக தொழில் அமைத்துக்கொள்ள ஏதுவாக, அவர்களுக்கு தொழிற்கல்வி மற்றும் சிறைத் தொழிற்சாலைகளில் செயல்முறை அனுபவம் ஆகியவற்றை உள்ளடக்கிய சீர்திருத்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தண்டனை சிறைவாசிகள் விடுதலைக்குப் பின்னர், வேலை வாய்ப்புகளைப் பெறவும், மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் இருப்பதற்காவும், அவர்களுக்கு தொழிற்பயிற்சி மற்றும் வாழ்க்கை திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. சிறைவாசிகள் சிறையில் இருக்கும் காலத்தில், ஒழுக்கத்தை வளர்க்கவும், புதிய திறன்களை பெறவும் மற்றும் பணி நெறிமுறைகளை கற்கும் வகையிலும் முத்திரை அரக்கு தொழிற்கூடம், நெசவு தொழிற்கூடம், காலணி தொழிற்கூடம், புத்தகம் கட்டுதல், கோர்ப்பான்கள் உற்பத்தி, குளியல் / சலவை சோப்பு தயாரிக்கும் தொழிற்கூடம், தையற்கூடம், தச்சுக் கூடம், காலணி பூச்சு தொழிற்கூடம், அடுமனை தொழிற்கூடம், கைமுறை காகிதக்கூடம், உலர் சாம்பல் கற்கள் (Fly

Ash Bricks) உற்பத்தி மற்றும் பயிற்சிக் கூடம் உள்ளிட்ட பல்வேறு தொழிற்கூடங்கள் சிறைகளில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், விவசாயம், இயற்கை உர உற்பத்தி தோட்டக்கலை மேம்பாடு போன்ற கிராமப்புற வருவாய் ஈட்டும் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

சிறைகளில் தயாரிக்கப்படும் பொருட்களான சீருடைத் துணி, வார்ப்பட்டை (belt), தொப்பிகள், சீருடைக் காலணிகள், காலணி பூச்சு, மழை மேலங்கி (raincoats), கொசு வலைகள் ஆகியன காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் ஆகிய துறைகளுக்கு வழங்கப்படுகின்றன. மேலும், முத்திரை அரக்கு, கோர்ப்பான், கோப்பு அட்டை, தபால் உறை, கட்டு மற்றும் காரத்துணி, சலவை சோப்பு மற்றும் பிற துணிவகைகள், தீ வாளிகள், இரும்பு கட்டில்கள், சலைன் ஸ்டேண்ட், தடுப்பாண்கள், தள்ளுவண்டிகள் மற்றும் மருந்து பெட்டகங்கள் (Bed–side Lockers) போன்றவை பல்வேறு அரசுத் துறைகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

சேவைத் துறை என்கிற வகையில், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, பல்வேறு அரசுத் துறைகளுக்கு இப்பொருட்களை வழங்குவதில் சிறப்புரிமை பெற்று விளங்குகிறது.

2023−2024−ஆம் ஆண்டில் சிறைத் தொழிற்கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ. 65.20 கோடி ஆகும்.

**(iv) சிறைவாசிகளுக்கான ஊதியம் ஈட்டும் திட்டம்**

சிறை தொழிற்கூடப் பணிகளில் தண்டனை பெற்ற சிறைவாசிகள் ஈடுபடுத்தப்பட்டு, அவர்களது திறனின் அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுகிறது. செயல்திறன் பெற்றோர், பகுதி செயல்திறன் பெற்றோர் மற்றும் செயல்திறன் பெறாதோர் என்று வகைப்படுத்தப்பட்டு, ஒரு சிறைவாசிக்கு நாளொன்றுக்கு முறையே ரூ.300/−, ரூ.270/− மற்றும் ரூ.240/− என உயர்த்தப்பட்ட ஊதியம் வழங்கப்படுகிறது. மேலும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய நிர்ணயக் குழு மூலம் ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்படுகிறது.

**(v) சிறைச் சந்தை**

சிறைவாசிகளது சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்விற்கு வாய்ப்பு அளிக்கும் வகையிலும், சிறைவாசிகளின் ஆற்றலை ஆக்கப்பூர்வமான வழியில் பயன்படுத்திடவும், "சிறைச் சந்தைகள்" அரசால் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இவற்றை விரிவுப்படுத்தும் பொருட்டு ரூ.10.00 இலட்சம்

கொண்ட ஒரு தொகுப்பு நிதி அரசால் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சிறைச் சந்தைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களான அடுமனைப் பொருட்கள், தோல் காலணிகள், பணப்பைகள் (Wallets) தோட்டக்கலை தயாரிப்புகள், சலவை சோப்பு, சானிட்டரி நாப்கின்கள், மெழுகுவர்த்திகள், கொசுவலைகள், மழைமேலங்கி (raincoats), காலணி பூச்சு, ஆயத்த ஆடைகள், மசாலா தூள், கைவினைப் பொருட்கள், காகித உறைகள், நோட்டுப் புத்தகங்கள், இயற்கை உரமிட்ட காய்கறிகள், செக்கு எண்ணெய் (Cold Pressed Edible Oil), மண்புழு உரம், பஞ்ச கவ்யம், இயற்கை பூச்சிக்கொல்லிகள், ஓவியங்கள் போன்ற பல்வேறு பொருட்கள் "ஃப்ரீடம்" (Freedom) என்ற பதிவு செய்யப்பட்ட குறியீட்டுப் பெயரில் (Trade Mark) விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், அழகு கலை நிலையம், சலவை துணி தேய்ப்பு நிலையம், உணவகம் போன்ற சேவை நிலையங்களும் சிறைச் சந்தைகளில் செயல்பட்டு வருகின்றன.

சிறைச் சந்தைகளில் கிடைக்கப் பெறும் இலாபத் தொகை கீழ்க்கண்டவாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது: –

அ) 20% சிறைவாசிகளின் ஊதியம்

ஆ) 20% அரசு கணக்கு

இ) 20% பணியாளர்களின் நல நிதிக் கணக்கு

ஈ) 40% தமிழ் நாடு சிறைத்துறை பொருட்கள் உற்பத்தி கணக்கு

இச்சந்தைகளில் 2023–2024–ஆம் ஆண்டு ரூ.734.57 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு ரூ.161.74 இலட்சம் நிகர லாபம் ஈட்டப்பட்டுள்ளது.

சிறைவாசிகளால் தயாரிக்கப்பட்டு சிறைச் சந்தைகளில் தற்போது விற்கப்பட்டு வரும் பொருட்களை தமிழ்நாடு காவலர் அங்காடியில் விற்பனை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

### (vi) பெட்ரோல் சில்லரை விற்பனை நிலையங்கள்

முதற்கட்டமாக, மத்திய சிறை–1 புழல், வேலூர், கோயம்புத்தூர், பாளையங்கோட்டை, பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய 5 சிறை வளாகங்களில் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு, தகுதியான

சிறைவாசிகளைக் கொண்டு இயக்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக நிறுவப்பட்ட மேற்கண்ட 5 பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் 2018–2019 முதல் 2023–2024 வரையிலான நிதியாண்டுகளில் (மார்ச்–2024 வரை) ரூ.1202.59 கோடிக்கு எரிபொருள் விற்பனை செய்யப்பட்டு ரூ.32.37 கோடி நிகர லாபம் ஈட்டப்பட்டுள்ளது.

மேலும், இரண்டாம் கட்டமாக மத்திய சிறை–1, புழல் – அம்பத்தூர் சாலை, மத்திய சிறை, கோவை பாரதியார் சாலை மற்றும் மத்திய சிறை, மதுரை ஆகிய இடங்களில் பெட்ரோல் சில்லரை விற்பனை நிலையங்கள் செயல்படுகின்றன. புழல், அம்பத்தூர் சாலையில் செயல்படும் பெட்ரோல் நிலையம் முற்றிலும் பெண் சிறைவாசிகளைக் கொண்டு நிருவகிக்கப்படுகிறது. மேலும், மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி. சேலம், மற்றும் பெண்கள் தனிச்சிறை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் பெட்ரோல் சில்லரை விற்பனை நிலையங்கள் துவங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(vii) சிறைவாசிகளுக்கான சீர்திருத்தத் திட்டம் (PATTAM)**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கிணங்க, முதன் முறையாக சிறு குற்றங்களில் ஈடுபடும் இளவயது (18−24 வயது) விசாரணை சிறைவாசிகளுக்கென வடிவமைக்கப்பட்ட ஒரு தொலை நோக்கு திட்டம் தான் 'பட்டம்' (PATTAM). இச்சொல் Personality & Attitude Transformation through Therapeutic Assistance and Management என்ற ஆங்கில சொற்றொடரின் சுருக்கமாகும். இத்திட்டம் காவல், நீதி, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் ஆகிய துறைகளுடன் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்படுத்தும் சீர்திருத்த திட்டமாகும்.

இத்திட்டம், சிறைவாசிகளை மீண்டும் சமுதாயத்துடன் ஒருங்கிணைத்து, சமூகத்தில் பொறுப்பான நபராக மாற்றும் வகையில், ஒரு முழுமையான சீர்திருத்தத்தை அதற்கேற்ற சூழலுடன் நடைமுறைப்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது. முதலில் சைதாப்பேட்டை கிளைச்சிறையில் துவங்கப்பட்ட இத்திட்டம் 02.10.2021 முதல் அனைத்து மத்திய சிறைகளுக்கும்

நீட்டிக்கப்பட்டது. நாளது தேதி வரை இத்திட்டத்தில் பங்கேற்ற 9370 சிறைவாசிகளில் 18 நபர்கள் மட்டுமே மீண்டும் குற்றம் புரிந்ததால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது தரவுகளின் மூலம் தெரிய வருகிறது. இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியதன் மூலம் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது.

**(viii) சீர்திருத்த சிறகுகள்**

தமிழ்நாடு முழுவதும் உள்ள சிறைகளில் பல சீர்திருத்த திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் கல்வி, திறன்பயிற்சி, தொழில் துறை பயிற்சி, யோகா, தியானம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவற்றுடன் போதைப் பொருள் மற்றும் மதுவுக்கு அடிமையான சிறைவாசிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 9 மத்திய சிறைகளிலும், 5 பெண்கள் தனிச்சிறைகளிலும் தனித்துவமான போதை மறுவாழ்வு மையங்கள் அமைத்து அனைத்து வகையான சிறைவாசிகளுக்கும் முழுமையான அணுகுமுறையுடன் கூடிய "சீர்திருத்த சிறகுகள்" என்ற திட்டத்தை அரசு அறிவித்துள்ளது.

போதை மறுவாழ்வு மையங்களுக்கான திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தொழிற்கல்வி ஆலோசகர் மற்றும் மனநல மருத்துவர் / சிகிச்சையாளர் ஆகியோருக்கு மதிப்பூதியம் வழங்குவதற்கும், மறுவாழ்வு மையத்திற்கு தேவையான மருந்துகளை கொள்முதல் செய்வதற்கும் 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.93.72 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ix) தண்டனைக் குறைப்பு / முன் விடுதலை**

தண்டனைக் குறைப்பு என்பது, சிறைவாசிகளின் நடத்தையை சீர்செய்து, அவர்களது பழக்க வழக்கங்களில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகளில் முக்கியமான ஒன்றாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்களது 115 வது பிறந்த நாளை முன்னிட்டு குறிப்பிட்ட இந்திய தண்டனை சட்டப் பிரிவுகளின் கீழ் தண்டனை பெற்று, 15.09.2023 அன்று 14 ஆண்டுகள் தண்டனை நிறைவு செய்த தகுதியுள்ள ஆயுள் தண்டனை சிறைவாசிகளை முன்விடுதலை செய்ய விரிவான வழிமுறைகளை வகுத்து அரசால் ஆணையிடப்பட்டது. அதன் அடிப்படையில்,

தகுதியுள்ள ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் நேர்வுகள் பரிசீலிக்கப்பட்டு, இது நாள் வரை 186 சிறைவாசிகள் அரசால் முன்விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், அறிவுரைக் கழகத் திட்டத்தின் கீழ் 2023 – 2024 ஆம் ஆண்டில் 26 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் முன்விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

**(x) விடுதலையடைந்த சிறைவாசிகளுக்கு நிதி உதவி வழங்குதல்**

விடுதலையடைந்த தண்டனை சிறைவாசிகளுக்கு தேவையான நிதி உதவிகளை எவ்வித பாகுபாடுமின்றி தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச்சங்கம் வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில் மட்டுமே இச்சங்கம் செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இச்சங்கத்தின் அலுவல்சார் முதன்மை தலைவராக அரசு தலைமைச் செயலாளர் அவர்களும், அலுவல்சார் தலைவராக உள்துறைச் செயலாளர் அவர்களும், துணைத் தலைவராக சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் அவர்களும் உள்ளனர்.

மறுவாழ்வு பணியின் ஒரு பகுதியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 05.05.2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச் சங்கத்தால் கண்டறியப்பட்ட 660 முன்னாள் சிறைவாசிகளுக்கு சுயதொழில் தொடங்கிட தலா ரூ.50,000/- வீதம் மொத்தம் ரூ.330.00 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்.

**(xi) விடுதலைக்குப் பின்னர் வேலைவாய்ப்பு**

சிறைவாசிகள் விடுதலைக்குப் பின் சமூகத்தில் ஒருங்கிணைந்து நன்முறையில் வாழ்க்கையினை நடத்திச் செல்வதற்கு தேவையான பொருளாதாரம் ஈட்டும் வகையில், சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை பல்வேறு தொழில் சார்ந்த திறன் பயிற்சிகளை நடைமுறைபடுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, வேலைவாய்ப்பு கோரும் விடுதலை பெற்ற சிறைவாசிகளை பணியமர்த்துவதற்காக, சிறைவாசிகள் பெற்றுள்ள திறன், சிறைவாசி விடுதலையாகும் நாள், சிறைவாசி பெற்றுள்ள திறன்தொடர்புடைய தொழிற்சாலைகள் மற்றும் சிறைவாசியின் இருப்பிடம் போன்ற விவரங்கள் முன்கூட்டியே சேகரிக்கப்பட்டு

அவர்களுக்கு வேலைவாய்ப்பு பெறுவதற்கான உதவிகள் செய்யப்படுகின்றன.

## X. மனமகிழ் நிகழ்வுகள்

### (i) வானொலி / தொலைக்காட்சி

சிறைவாசிகளின் தனிமையை போக்குவதற்கும், அவர்களின் மன இறுக்கத்தை பெருமளவில் குறைப்பதற்கும், சிறைகளில் இசை மற்றும் இதர வானொலி பண்பலை நிகழ்ச்சிகள் ஒலிபெருக்கிகள் மூலம் ஒலிபரப்பப்படுகின்றன. மேலும், தனிநபர் வளர்ச்சி மற்றும் துன்பங்களை சமாளித்தல் போன்ற மனநலம் தொடர்பான தலைப்புகளில் ஊக்கமளிக்கும் உரைகள் ஆடியோ புத்தகங்கள் மூலம் ஒலிபரப்பப்படுகின்றன. இவ்வுரைகள், சிறைவாசிகள் போதை பழக்கத்திலிருந்து விடுபடவும், கோபத்தினை குறைத்திடவும் உதவுகிறது.

சிறைவாசிகளின் பொழுதுபோக்கிற்காக போதுமான தொலைக்காட்சிப் பெட்டிகள் சிறைகளில் பொருத்தப்பட்டுள்ளன. இவை நல்லொழுக்கம் மற்றும் நீதிக்கருத்துக்களை கற்பிக்கும் வகையிலான திரைப்படங்கள் திரையிட பயன்படுத்தப்படுகின்றன.

**(ii) இசை**

சிறைவாசிகள் தங்கள் கோபம் மற்றும் மன அழுத்தத்தை கட்டுப்படுத்தி மற்றவர்களுடன் இயல்பாக பழகும் வகையில் மனமாற்றம் ஏற்படுத்தும் கருவியாக இசை விளங்குகிறது. சிறைகளில் ஒலிபரப்பப்படும் இசை, அங்குள்ள ஆண்கள், பெண்கள் மற்றும் இளைஞர்களின் தன்னம்பிக்கை மற்றும் தன்மதிப்பை அதிகரிப்பதுடன் நேர்மறையான கற்றல் அனுபவங்களை உருவாக்கவும் உதவுகிறது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் சிறைவாசிகள் இசைக்கருவிகளை வாசிக்க பயிற்றுவிக்கப்படுவதுடன் இசைகுழுக்களும் செயல்படுகின்றன.

**(iii) விளையாட்டு வழி சீர்திருத்தம்**

சிறைவாசிகளின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தி அவர்களை சீர்படுத்துவதற்கு விளையாட்டு ஒரு சிறந்த வழியாக திகழ்கிறது. விளையாட்டு ஒருவரின் மனக்கட்டுப்பாடு, சுயமரியாதை, சூழலை எதிர்கொள்ளும் திறன் ஆகியவற்றை மேம்படுத்துகிறது. சிறைவாசிகள் மாலையில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அவர்கள் விரும்பும் சதுரங்கம், கேரம், டெனிகாய்ட் போன்ற

உள் அரங்க விளையாட்டுகளையும், கைப்பந்து, இறகுப்பந்து போன்ற வெளிப்புற விளையாட்டுக்களையும் விளையாட ஊக்குவிக்கப் படுகிறார்கள். இதற்கு அனைத்து சிறைகளிலும் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு கைபந்தாட்ட மைதானம் மற்றும் ஒரு இறகுப்பந்து மைதானம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இதன் வழியாக சிறைவாசிகள் தங்கள் எதிர்மறை எண்ணங்கள் மற்றும் மன உளைச்சல்களிலிருந்து ஆரோக்கியமான முறையில் விடுபடமுடியும். அது மட்டுமின்றி, உடற்பயிற்சி தசை இறுக்கத்தை குறைத்து உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

**(iv) யோகா மற்றும் தியானம்**

சிறைவாசிகளின் சீர்திருத்தத்தில் யோகா மற்றும் தியானம் முக்கிய பங்கு வகிக்கிறது. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் சிறைவாசிகளுக்கு யோகா மற்றும் தியானப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**(v) கலை நிகழ்ச்சிகள்**

சிறைவாசிகளின் சீர்திருத்தத்தில் கலைநிகழ்ச்சிகள் முக்கிய பங்குவகிக்கின்றன. நாடகம், நாட்டுப்புற

நடனம், வினாடி–வினாபோட்டி, பட்டிமன்றம், பாட்டு, சொற்பொழிவு மற்றும் கட்டுரை எழுதுதல் போன்ற போட்டிகள் சிறைகளில் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. சிறைவாசிகள் நலனில் அக்கறை கொண்ட தனிநபர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் சிறைவாசிகளின் மறுவாழ்வு பயிற்சி திட்டங்கள் மற்றும் நீதி நெறி சொற்பொழிவுகள் நடத்துவதற்கு உரிய அனுமதி வழங்கப்படுகிறது. காந்தியடிகள் பிறந்ததினம் "சிறைவாசிகளின் நல நாளாக" கொண்டாடப்படுவதால், அன்றைய தினத்தில் இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவது அதிக முக்கியத்துவம் பெறுகிறது. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் பிற நாட்களிலும் சிறையில் கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்த அனுமதிக்கப்படுகிறார்கள்.

## XI. பணியாளர் நலன்

பணியாளர்களின் நல்வாழ்வுக்காகவும், அசாதாரண சூழலில் பணியாற்றும் வகையில் மனஉறுதியை அதிகரித்து, அவர்களை ஊக்குவிக்கவும் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில்

பல்வேறு பதக்கங்கள்/ படிகள்/ வசதிகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன :

**(i) பதக்கங்கள்**

பணிக் காலத்தில் வீரதீரத்துடனும், போற்றத்தக்க வகையிலும், சிறந்த பணிச்சான்று கொண்டிருக்கும் சீருடைப் பணியாளர்களின் திறனை அங்கீகரிக்கும் வகையிலும் அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் கீழ்க்கண்ட பதக்கங்கள் வழங்கப்படுகின்றன :–

**அ) தமிழ்நாடு முதலமைச்சரின் சிறை நற்பணி பதக்கம் (பொங்கல் பதக்கம்)**

பொங்கல் நாளன்று ஆண்டுதோறும் 60 முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு, அவர்கள் ஆற்றிய நற்பணிக்காக இப்பதக்கமும், பதக்கப் படியாக மாதந்தோறும் ரூ.400–ம் வழங்கப்படுகிறது.

**ஆ) தமிழ்நாடு முதலமைச்சரின் சிறை சேவைக்கான பதக்கம் (அண்ணா பதக்கம்)**

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் பத்து சிறைப் பணியாளர்களுக்கு அவர்களின் அப்பழுக்கற்றப்

பணியினை பாராட்டி இப்பதக்கம் வழங்கப்படுகிறது. பதக்கம் பெறும் பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு பரிசு தொகை அரசால் வழங்கப்படுகிறது:–

| | | |
|---|---|---|
| 1. | சிறை அலுவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் நிலை வரை | ரூ.15,000 |
| 2. | உதவி சிறை அலுவலர் மற்றும் துணை சிறை அலுவலர் | ரூ.10,000 |
| 3. | இரண்டாம் நிலை காவலர் தொடங்கி முதல் தலைமை காவலர் நிலை வரை | ரூ. 5,000 |

### இ) தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீர செயலுக்கான பதக்கம்

தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீர செயலுக்கான பதக்கம் பெறுவோருக்கு, பதவி வேறுபாடின்றி, ரொக்கப்பரிசு ரூ.5.00 இலட்சம் அரசால் வழங்கப்படுகிறது.

### ஈ) குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணிப் பதக்கம்

ஆண்டுதோறும் குடியரசு தினம் மற்றும் சுதந்திர தினத்தன்று சிறைப் பணியாளர்களுக்கு அவர்களின் அப்பழுக்கற்ற பணியினைப் பாராட்டி, இப்பதக்கம் வழங்கப்படுகிறது.

## (ii) கருணைத் தொகை வழங்குதல்

பணியில் இருக்கும் போது வீரதீர செயல்களில் ஈடுபட்டு, தங்களது உயிரை இழக்கும் சிறைப் பணியாளர்களுக்கு அவர்களது சேவையை அங்கீகரிக்கும் வகையில் இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணைத் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகை அவர்களின் வாரிசுதாரர்களுக்கு, பணியாளர்கள் இறுதியாக பெற்ற ஊதியம், அப்பணியாளர் உயிரோடு இருந்தால் அவர் பணி மூப்பில் ஓய்வு பெறும் நாள் எதுவோ, அது வரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. அதன் பின் தகுதியான குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

மேலும், இறந்த பணியாளர்களின் குடும்பத்தினருக்கு கூடுதலாக கருணைத் தொகை ரூ.2.00 இலட்சம் வழங்கப்படுகிறது. இதைத் தவிர கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கும், கருணைத் தொகை வழங்கப்படுகிறது :–

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தர ஊனம் | ரூ. 50,000 |
| 2. | படுகாயம் | ரூ. 10,000 |
| 3. | சாதாரண காயம் | ரூ.5,000 |

**(iii) தமிழ்நாடு சிறை சேமநல நிதி**

அரசிதழ் பதிவுறா பணியாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களுக்கும் நிதி உதவி வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு சிறை சேம நலநிதிக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.10.00 இலட்சம் இணை மானியமாக (matching grant) அரசால் வழங்கப்படுகிறது.

இந்நிதியிலிருந்து இத்திட்டத்தின் உறுப்பினர்களுக்கு கல்லூரிக் கல்வி, நாட்பட்ட கடுமையான நோய்கள், விபத்து காயங்கள் போன்றவற்றிற்கு, மருத்துவ சிகிச்சைக்கான நிதி உதவி வழங்கப்படுகிறது. மேலும், பணியாளர்களோ அவர்களது குடும்ப உறுப்பினரோ இறந்துவிட்டாலும் இத்திட்டத்திலிருந்து நிதி உதவி வழங்கப்படுகிறது.

**(iv) உணவுப் படி**

2023–ஆம் ஆண்டிலிருந்து, மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்டச் சிறைகளில் அவசர கால பணிகள், போராட்ட கைது நடவடிக்கைகள், சிறை வளாகங்களில் சோதனை செய்தல் போன்ற நேர்வுகளில் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளும் இரண்டாம் நிலை சிறைக்காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரையிலான

களப்பணியாளர்களுக்கு, சென்னை நகரில் நாள் ஒன்றிற்கு ரூ.300/- வீதம் ஒரு மாதத்தில் பத்து நாட்களுக்கும், இதர மாவட்டங்களில் நாள் ஒன்றிற்கு ரூ.250/- வீதம் ஒரு மாதத்தில் 6 நாட்களுக்கும், உணவுப்படி வழங்கப்படுகிறது.

**(v) இரவு உணவுப்படி**

இரண்டாம் நிலை சிறைக் காவலர் தொடங்கி, முதல் தலைமை காவலர் வரையிலான நிலையில் உள்ள பணியாளர்களுக்கு இரவு உணவுப்படியாக நாள் ஒன்றுக்கு தலா ரூ.100/- வழங்கப்படுகிறது.

**(vi) இடர்படி**

இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் சிறைக்கண்காணிப்பாளர் வரையிலான நிலையில் உள்ள அலுவலர்களுக்கு இடர்படி மாதம் ஒன்றுக்கு ரூ.800/- லிருந்து ரூ.1000/- ஆக 2023-24ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**(vii) தையற் கட்டணம் மற்றும் சலவைப்படி**

இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான நிலையில் உள்ள பணியாளர்களுக்கு இரண்டு சீருடை தைப்பதற்கு தையற் கட்டணமாக ஆண்டுதோறும்

தலா ரூ.1000/– மற்றும் சலவைப்படியாக மாதம்தோறும் ரூ.500/– வழங்கப்படுகிறது.

**(viii) மிகை நேரப் பணி ஊதியம்**

வாராந்திர ஓய்வு நாளன்று பணிபுரியும், முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு மிகை நேரப் பணி ஊதியம் (Extra Time Remuneration) ரூ.500/– ஆக இந்த ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**(ix) குழுக் காப்பீட்டுத் திட்டம்**

இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் சிறைத்துறை துணைத் தலைவர் வரையிலான நிலையில் உள்ள களப்பணியாளர்களின் நலனுக்காக குழுக் காப்பீட்டுத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பணியில் இருக்கும் போது இயற்கையாக அல்லது விபத்தின் காரணமாக இறக்க நேரிடும் பணியாளர்களுக்கு ரூ.2.00 இலட்சம் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது.

**(x) பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல்**

இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் சிறைத்துறைத் துணைத் தலைவர் வரையிலான

களப்பணியாளர்களுக்கு அரசால் குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டு வருகிறது. தேவைக்கேற்ப புதிய பணியாளர் குடியிருப்புகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம் மூலம் கட்டப்பட்டு வருகின்றன.

**(xi) கட்டிட பராமரிப்பு நிதி**

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் மூலம் சிறை கட்டிடங்கள் மற்றும் பணியாளர் குடியிருப்புகளில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.500 இலட்சம் தொடர் செலவினமாக அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருகிறது. இந்த தொகையின் மூலம் சிறை கட்டிடங்களின் பழுது மற்றும் பராமரிப்புப் பணிகள் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(xii) சிறை களப்பணியாளர்களுக்கு மழை மேலங்கிகள் (rain coats) மற்றும் கொசுவலைகள் வழங்குதல்.**

அனைத்து சிறை களப்பணியாளர்களின் பயன்பாட்டிற்காக, 3 ஆண்டுக்கு ஒரு முறை மழை மேலங்கிகளும், கொசுவலைகளும் வழங்கப்படுகின்றன.

**(xiii) காவல்துறை சிறப்பு அங்காடிகளில் மானிய விலையில் பொருட்கள் பெறுதல்**

காவல்துறை சிறப்பு அங்காடிகளில் (Police Canteens) மானிய விலையில் வழங்கப்படும் பொருட்களை பெற்றுக் கொள்ளும் சலுகை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் பணிபுரியும்/ ஓய்வு பெற்ற/ காலஞ்சென்ற சீருடை / அமைச்சு மற்றும் இதர பணியாளர்களின் குடும்பங்களுக்கு 2012–ஆம் ஆண்டு முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**(xiv) மானிய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள்**

நியாய விலைக் கடைகளின் மூலம் 15 கிலோ விலையில்லா அரிசியும், விற்பனை விலையில் 50 சதவிகித சலுகையில் கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு ஆகியவையும் இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரையிலான நிலையில் உள்ள சிறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**(xv) பணியாளர்களின் குறை தீர்க்கும் செயலாக்க முறை**

சிறைப்பணியாளர்களின் குறைகளை களையும் பொருட்டு கீழ்க்கண்ட அலுவலர்களால் குறை தீர்ப்பு

நாள் கூட்டங்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு நடத்தப்பட்டு வருகின்றன:–

| | | |
|---|---|---|
| 1. | தலைமை இயக்குநர் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை | காலாண்டிற்கு ஒருமுறை |
| 2. | சரக சிறைத்துறைத் துணை தலைவர் | மாதம் ஒருமுறை |
| 3. | சிறை கண்காணிப்பாளர்கள் | வாரம் ஒருமுறை |

தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்துறை, தலைமை அலுவலகத்திலும் சிறைகளில் ஆய்வு/ பார்வை மேற்கொள்ளும் போதும் சிறைப் பணியாளர்களால் அளிக்கப்படும் விண்ணப்பங்களைப் பெற்று குறைகளை களைய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். குறை தீர்ப்பு கூட்டங்களின் போது பணியாளர்களால் தெரிவிக்கப்படும் குறைகளைக் களைவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

## XII. புதிய செயல்பாடுகள்

### (i) உயர் பாதுகாப்பு சிறை

அடிப்படைவாதிகள், தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் மற்றும் அதிக ஆபத்துள்ள சிறைவாசிகளை நிருவகிக்கும் பொருட்டு ரூ.104.17 கோடி மதிப்பீட்டில் ஒன்றிய அரசின் நிதியுதவி மூலம் திருச்சிராப்பள்ளியில் உயர் பாதுகாப்பு சிறை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

### (ii) தலைமை அலுவலக உடற்பயிற்சிக் கூடம்

பணியாளர்களின் நல்வாழ்வுக்காகவும், அவர்களின் உடல் மற்றும் மன உறுதியை அதிகரிக்கவும், அசாதாரண/ அவசர சூழலில் பணியாற்ற அவர்களை ஊக்கப்படுத்தும் வகையிலும் தலைமை அலுவலகத்தில் ரூ.14.30 இலட்சம் செலவில் உடற்பயிற்சி கூடம் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

### (iii) நேரியல் அல்லாத சந்திப்பு கண்டுபிடிப்பு கருவி (Non–Linear Junction Detector)

சிறைக்குள் தடை செய்யப்பட்ட மின்னணு கருவிகள் பயன்படுத்துவதை தடுப்பதற்கு, 13 நேரியல் அல்லாத சந்திப்பு கண்டுபிடிப்பு (Non Linear Junction

Detectors) கருவிகள் ரூபாய் 325.00 இலட்சம் செலவில் அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பூவிருந்தவல்லி தனிக் கிளைச் சிறை ஆகிய சிறைகளில் 2023–ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ளன.

**(iv) குறும்பரப்பு இணையம் மற்றும் தடுப்புச் சுவர்**

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை அலுவலகத்தின் கணினி சார் தரவுகளை (Data) பாதுகாக்கும் பொருட்டு குறும் பரப்பு இணையம் (Local Area Network) மற்றும் தடுப்புச் சுவர் (Fire Wall) ரூ.59.00 இலட்சம் செலவில் நிறுவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## XIII. முடிவுரை


குற்றவியல் நீதி முறை அமைப்பின் முக்கியத் தூணாக விளங்கும் சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறையின் சீரிய நிருவாகத்திற்கு அரசு உரிய முன்னுரிமை அளித்து வருகிறது. சிறைகளின் பாதுகாப்பு, சிறைவாசிகளின் சீர்திருத்தம், மறுவாழ்வு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதில் தீவிர முனைப்புடன் செயல்பட்டு வரும் அதே வேளையில், சம கால தொழில்நுட்ப வளர்ச்சியை பயன்படுத்தி சிறை நிருவாகத்தை நவீனப்படுத்துவதில் தொடர்ச்சியான முயற்சிகள்

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறைப் பணியாளர்களின் திறன் மேம்பாட்டிற்காகவும், உற்சாகமான பணிச்சூழலை உருவாக்கும் விதமாகவும் பல்வேறுவிதமான பணியாளர் நலத் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை இந்திய அளவிலும் உலக அளவிலும் சிறந்த இடத்தைப் பெறுவதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் அரசு பேராதரவு நல்கி வருகிறது.

**எஸ்.ரகுபதி**
சட்டத்துறை அமைச்சர்

## பிற்சேர்க்கை – I

### சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் நிர்வாக அமைப்பு




குறிப்பு: மத்திய சிறைக் கண்காணிப்பாளர்களின் (புழல் மத்திய சிறை–2 தவிர) அதிகார வரம்பிற்குட்பட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளி மற்றும் கிளைச் சிறைகள் அவர்களது கட்டுப்பாட்டில் செயல்படும்.

## பிற்சேர்க்கை – II

## சிறைகளில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அடைப்பு எண்ணிக்கையின் விவரம்

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| | **சென்னை மாவட்டம்** | |
| 1 | மத்திய சிறை–I, புழல் | 1250 |
| 2 | மத்திய சிறை–II, புழல் | 2000 |
| 3 | பெண்கள் தனிச்சிறை, புழல் | 500 |
| 4 | ட்ரான்ஸிட் யார்டு, புழல் | 100 |
| 5 | கிளைச்சிறை, சைதாப்பேட்டை | 175 |
| | **காஞ்சிபுரம் மாவட்டம்** | |
| 6 | கிளைச்சிறை, காஞ்சிபுரம், | 34 |
| | **செங்கல்பட்டு மாவட்டம்** | |
| 7 | மாவட்டச்சிறை செங்கல்பட்டு | 200 |
| 8 | கிளைச்சிறை, மதுராந்தகம் | 62 |
| | **திருவள்ளூர் மாவட்டம்** | |
| 9 | கிளைச்சிறை, திருவள்ளூர் | 36 |
| 10 | கிளைச்சிறை, பொன்னேரி | 42 |
| 11 | கிளைச்சிறை, திருத்தணி | 36 |
| 12 | தனிக்கிளைச்சிறை, பூந்தமல்லி | 152 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| | **வேலூர் மாவட்டம்** | |
| 13 | மத்திய சிறை, வேலூர் | 2130 |
| 14 | பெண்கள் தனிச்சிறை, வேலூர் | 469 |
| 15 | மத்திய சிறை, வேலூர் (இணைப்பு) | 54 |
| 16 | கிளைச்சிறை, குடியாத்தம். | 54 |
| | **திருப்பத்தூர் மாவட்டம்** | |
| 17 | கிளைச்சிறை, ஆம்பூர் | 20 |
| 18 | கிளைச்சிறை, திருப்பத்தூர் | 74 |
| 19 | கிளைச்சிறை, வாணியம்பாடி | 30 |
| | **ராணிப்பேட்டை மாவட்டம்** | |
| 20 | கிளைச்சிறை, அரக்கோணம் | 36 |
| 21 | கிளைச்சிறை, வாலாஜா | **19** |
| | **திருவண்ணாமலை மாவட்டம்** | |
| 22 | கிளைச்சிறை , செய்யாறு (வருவாய்த்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது) | 48 |
| 23 | கிளைச்சிறை, திருவண்ணாமலை | 49 |



| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 24 | கிளைச்சிறை, ஆரணி (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 17 |
| 25 | கிளைச்சிறை, செங்கம் | 09 |
| 26 | கிளைச்சிறை,போளூர் | 36 |
| 27 | கிளைச்சிறை, வந்தவாசி | 19 |
| | **கடலூர் மாவட்டம்** | |
| 28 | மத்திய சிறை, கடலூர் | 723 |
| 29 | கிளைச்சிறை, கடலூர் (பெண்கள்) | 100 |
| 30 | கிளைச்சிறை, கடலூர் | 143 |
| 31 | கிளைச்சிறை, விருத்தாச்சலம் | 30 |
| 32 | கிளைச்சிறை, பரங்கிப்பேட்டை (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 24 |
| 33 | கிளைச்சிறை, பண்ருட்டி | 15 |
| 34 | கிளைச்சிறை, சிதம்பரம் | 28 |
| | **விழுப்புரம் மாவட்டம்** | |
| 35 | மாவட்டச்சிறை, விழுப்புரம் | 200 |
| 36 | கிளைச்சிறை, விழுப்புரம் | 42 |
| 37 | கிளைச்சிறை, திண்டிவனம் | 29 |
| 38 | கிளைச்சிறை, செஞ்சி | 80 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| | **கள்ளக்குறிச்சி மாவட்டம்** | |
| 39 | கிளைச்சிறை, கள்ளக்குறிச்சி | 18 |
| 40 | கிளைச்சிறை, உளுந்தூர்பேட்டை | 24 |
| 41 | கிளைச்சிறை, திருக்கோவிலூர் | 24 |
| | **சேலம் மாவட்டம்** | |
| 42 | மத்திய சிறை, சேலம் | 1431 |
| 43 | மாவட்டச்சிறை, ஆத்தூர் | 200 |
| 44 | திறந்தவெளிச்சிறை, சேலம் | 10 |
| 45 | தனிக்கிளைச்சிறை, சேலம் (பெண்கள் ) | **110** |
| 46 | கிளைச்சிறை, சங்கிரி | 27 |
| 47 | கிளைச்சிறை, ஓமலூர் | 48 |
| | **நாமக்கல் மாவட்டம்** | |
| 48 | கிளைச்சிறை, நாமக்கல் | 34 |
| 49 | கிளைச்சிறை, பரமத்தி | 16 |
| 50 | கிளைச்சிறை, ராசிபுரம் | 24 |
| 51 | கிளைச்சிறை, திருச்செங்கோடு | 19 |
| | **தருமபுரி மாவட்டம்** | |
| 52 | மாவட்டச்சிறை தருமபுரி | 200 |



| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 53 | கிளைச்சிறை, தருமபுரி | 36 |
| 54 | கிளைச்சிறை, அரூர் | 48 |
| | **கிருஷ்ணகிரி மாவட்டம்** | |
| 55 | கிளைச்சிறை, கிருஷ்ணகிரி (பெண்கள்) | 73 |
| 56 | கிளைச்சிறை, ஊத்தங்கரை (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 16 |
| 57 | கிளைச்சிறை, ஓசூர் | 44 |
| | **கோயம்புத்தூர் மாவட்டம்** | |
| 58 | மத்திய சிறை கோயம்புத்தூர் | 2124 |
| 59 | பெண்கள் தனிச்சிறை, கோயம்புத்தூர் | 187 |
| 60 | திறந்த வெளிச்சிறை, சிங்காநல்லூர் | 100 |
| 61 | கிளைச்சிறை, மேட்டுப்பாளையம் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 36 |
| 62 | கிளைச்சிறை, பொள்ளாச்சி | 97 |
| | **ஈரோடு மாவட்டம்** | |
| 63 | மாவட்டச்சிறை கோபிசெட்டிபாளையம் | 200 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 64 | கிளைச்சிறை, ஈரோடு | 35 |
| 65 | கிளைச்சிறை, சத்தியமங்கலம் | 16 |
| 66 | கிளைச்சிறை, பவானி | 24 |
| 67 | கிளைச்சிறை, பெருந்துறை | 08 |
| | **நீலகிரி மாவட்டம்** | |
| 68 | கிளைச்சிறை, உதகமண்டலம் | 35 |
| 69 | கிளைச்சிறை, குன்னூர் | 32 |
| 70 | கிளைச்சிறை, கூடலூர் | 28 |
| | **திருப்பூர் மாவட்டம்** | |
| 71 | மாவட்டச்சிறை, திருப்பூர் | 200 |
| 72 | மாவட்டச் சிறை, திருப்பூர் – பெண்கள் இணைப்பு | 90 |
| 73 | கிளைச்சிறை, அவினாசி | 70 |
| 74 | கிளைச்சிறை, உடுமலைப்பேட்டை | 25 |
| 75 | கிளைச்சிறை, தாராபுரம் | 26 |
| 76 | கிளைச்சிறை, பல்லடம் | 24 |
| | **திருச்சி மாவட்டம்** | |
| 77 | மத்திய சிறை, திருச்சி | 2517 |
| 78 | பெண்கள் தனிச்சிறை, திருச்சி | 600 |



| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 79 | கிளைச்சிறை, மணப்பாறை | 14 |
| 80 | கிளைச்சிறை, முசிறி | 17 |
| 81 | கிளைச்சிறை, துறையூர் | 17 |
| 82 | கிளைச்சிறை, லால்குடி | 23 |
| | **அரியலூர் மாவட்டம்** | |
| 83 | கிளைச்சிறை, அரியலூர் | 21 |
| 84 | கிளைச்சிறை, ஜெயங்கொண்டம் | 19 |
| | **பெரம்பலூர் மாவட்டம்** | |
| 85 | கிளைச்சிறை, பெரம்பலூர் | 18 |
| | **கரூர் மாவட்டம்** | |
| 86 | கிளைச்சிறை, கரூர் | 36 |
| 87 | கிளைச்சிறை, குளித்தலை | 26 |
| | **புதுக்கோட்டை மாவட்டம்** | |
| 88 | மாவட்டச்சிறை, புதுக்கோட்டை | 245 |
| 89 | பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை | 200 |
| 90 | கிளைச்சிறை, அறந்தாங்கி | 28 |
| 91 | கிளைச்சிறை, திருமயம் | 14 |
| 92 | கிளைச்சிறை, கீரனூர் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 08 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| | **தஞ்சாவூர் மாவட்டம்** | |
| **93** | கிளைச்சிறை, திருவிடைமருதூர் | **51** |
| 94 | கிளைச்சிறை, தஞ்சாவூர் | 87 |
| 95 | கிளைச்சிறை, பாபநாசம் | 46 |
| 96 | கிளைச்சிறை, பட்டுக்கோட்டை (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது). | 38 |
| 97 | கிளைச்சிறை, கும்பகோணம் | 44 |
| | **நாகப்பட்டினம் மாவட்டம்** | |
| 98 | மாவட்டச்சிறை, நாகப்பட்டினம் | 200 |
| 99 | கிளைச்சிறை, சீர்காழி | 28 |
| 100 | கிளைச்சிறை, மயிலாடுதுறை | 24 |
| 101 | கிளைச்சிறை, தரங்கம்பாடி | 12 |
| | **திருவாரூர் மாவட்டம்** | |
| 102 | கிளைச்சிறை, திருவாரூர் (பெண்கள்) | 20 |
| 103 | கிளைச்சிறை, திருத்துறைப்பூண்டி | 28 |
| 104 | கிளைச்சிறை, நன்னிலம் | 24 |
| 105 | கிளைச்சிறை, மன்னார்குடி | 19 |



| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| | **மதுரை மாவட்டம்** | |
| 106 | மத்திய சிறை, மதுரை | 1252 |
| 107 | பெண்கள் தனிச்சிறை, மதுரை | 262 |
| 108 | கிளைச்சிறை, மேலூர் | 48 |
| 109 | கிளைச்சிறை, உசிலம்பட்டி | 18 |
| 110 | கிளைச்சிறை, திருமங்கலம் | 25 |
| | **திண்டுக்கல் மாவட்டம்** | |
| 111 | மாவட்டச்சிறை, திண்டுக்கல் | 200 |
| 112 | கிளைச்சிறை, வேடசந்தூர் | 16 |
| 113 | கிளைச்சிறை, பழனி, | 43 |
| 114 | கிளைச்சிறை, கொடைக்கானல் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 09 |
| 115 | கிளைச்சிறை, நிலக்கோட்டை (பெண்கள்) | 36 |
| | **தேனி மாவட்டம்** | |
| 116 | மாவட்டச்சிறை, தேனி | 200 |
| **117** | கிளைச்சிறை, உத்தமபாளையம் | 21 |
| **118** | கிளைச்சிறை, பெரியகுளம் | **39** |
| | **சிவகங்கை மாவட்டம்** | |
| 119 | கிளைச்சிறை, சிவகங்கை | 20 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 120 | கிளைச்சிறை, திருப்பத்தூர் | 22 |
| 121 | திறந்த வெளிச்சிறை, புரசடைஉடைப்பு | 150 |
| | **இராமநாதபுரம் மாவட்டம்** | |
| 122 | மாவட்டச்சிறை, இராமநாதபுரம் | 200 |
| 123 | கிளைச்சிறை, பரமக்குடி (பெண்கள் ) | 18 |
| 124 | கிளைச்சிறை,முதுகுளத்தூர் | 21 |
| 125 | கிளைச்சிறை, திருவாடனை (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 12 |
| | **விருதுநகர் மாவட்டம்** | |
| 126 | மாவட்டச் சிறை, விருதுநகர் | 200 |
| 127 | கிளைச்சிறை, அருப்புக்கோட்டை | 13 |
| 128 | கிளைச்சிறை, ஸ்ரீ வில்லிபுத்தூர் | 24 |
| 129 | கிளைச்சிறை, சாத்தூர் (பெண்கள்) (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.) | 29 |
| | **திருநெல்வேலி மாவட்டம்** | |
| 130 | மத்திய சிறை, பாளையங்கோட்டை | 1332 |



| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 131 | தனிக் கிளைச்சிறை கொக்கிரகுளம் (பெண்கள்) | 84 |
| 132 | கிளைச்சிறை, அம்பாசமுத்திரம் | 16 |
| 133 | தனிக் கிளைச்சிறை, நாங்குநேரி | 107 |
| | **தென்காசி மாவட்டம்** | |
| 134 | கிளைச்சிறை, தென்காசி | 44 |
| 135 | கிளைச்சிறை, சங்கரன்கோவில் | 12 |
| | **தூத்துக்குடி மாவட்டம்** | |
| 136 | மாவட்டச்சிறை, பேரூரணி | 200 |
| 137 | கிளைச்சிறை, ஸ்ரீவைகுண்டம் | 72 |
| 138 | கிளைச்சிறை, கோவில்பட்டி | 42 |
| 139 | கிளைச்சிறை, திருச்செந்தூர் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 37 |
| | **கன்னியாகுமரி மாவட்டம்** | |
| 140 | மாவட்டச்சிறை, நாகர்கோவில் | 230 |
| 141 | கிளைச்சிறை, தக்கலை (பெண்கள் ) | 24 |
| 142 | கிளைச்சிறை, குழித்துறை | 16 |
| | **மொத்தம்** | **24,342** |




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 1500 புத்தகங்களை தமிழ்நாட்டில் உள்ள சிறை நூலகங்களுக்கு 28,10,2023 அன்று வழங்கினார்.




மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 24.04.2023 அன்று புழல், மத்திய சிறையில் பணியாளர்கள் சுற்று மேற்கொள்ள மின் மிதிவண்டிகளை வழங்கினார்.



திருச்சி மத்திய சிறை கவாத்து திடலில் 29.01.2024 அன்று நடைபெற்ற சிறைக் காவலர் பயிற்சி நிறைவு விழாவில் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.இரகுபதி அவர்கள் கலந்து கொண்டார்.



29.04.2024 அன்று மாண்புமிகு உச்ச நீதிமன்ற நீதிபதி திரு.நீதியரசர் சஞ்சீவ் கண்ணா அவர்கள் சிறையில் KIOSK கருவி செயல்படும் முறையினை பார்வையிட்டார்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.